KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

## A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

| | |
|---|---|
| வருஷ சந்தா | காரியாலயம்:— |
| உள் நாடு ரூ. 7 8 0 | வேளாளர் தெரு, |
| புற நாடு ரூ. 9 8 0 | புரசைபாக்கம், சென்னை. |

Vol 5.] 1932 ௵ ஆகஸ்ட் ௴ 18௳ [No. 32

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 621
2. தமிழ்ப்பாடம்
   நளவெண்பா - கலிதொடர்காண்டம் 623
3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 5-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 625
4. எல்லாம் வீணே (ஓர் சிறுநாடகம்)
   G S. இரகுராமன் B.A. 626
5. நெய்தற்கலியுள் ஓர் செய்யுள்
   C. பழனிக்குமரன் 628
6. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
   T. R. இராஜகோபால் 630
7. பக்தியின் பெருமை
   C. சுந்தரம் ஐயர், B.A. & V. N. இராதாகிருஷ்ண ஐயர் 631
8. பொதிகைநிகண்டு - (விலங்கின் பெயர்)
   சம்பந்தம் 632
9. கம்பராமாயணம் (கரனவதைப் படலம்)
   T. N. சேஷாசலம். B.A. B.L. 634
10. வர்த்தமானம் 639


## கலாநிலயம்

### விருப்பமும் கருவியும் 7.

தனி விருப்பத்தால் தளிர்க்கும் ஓர் மனத்திற்கும் பொதுவகையால் பேசப்படும் நோக்கத்திற்கும் இடையே கிடக்கும் வேற்றுமையை, ஆங்கில அறிஞர் கில்பர்ட் மர்றே (Gilbert Murray L. L. D., D. Litt) என்பவர் பின்வருமாறு ஆராய்ந்து கூறகின்றார்:—

IF I had one remark and one only to make about National Ideals, it would be this: that the conscious and professed ideals are as straws in the wind; the unconscious or concealed ideals are the real forces that govern mankind. Some philosopher, I think it was Herbart, has compared the unconscious part of human character to the submerged part of an iceberg at sea. The great bulk of the iceberg is under water, invisible and unnoticeable: what we call the iceberg is only the cluster of towers and pinnacles that reach up into the light. The great bulk of human character lies below the water-line of consciousness. We breathe, digest, preserve our balance, without thinking of it: we seek what we like and shun what we dislike without thanking of it: we devise the ways of getting or of shunning, we plot, scheme, flatter, slander, bribe and threaten—without thinking of it, without knowing it, without reason or conscience having a hearing on the subject.

The awakened, reasonable, conscious Man is the topmost tower of the whole great structure. But it is the instinctive and unconscious Man that supplies both the mass and the momentum. It is this submerged self, this self which, to use the mediæval phrase "slumbers beneath the threshold," that counts for most in the movements of masses and of nations. The instinctive man is not, of course, necessarily wicked; he is the source of good as well as of evil, of love as well as of hate. But it is well to observe him; for if ever you cease to observe him, he will deceive you.

*It must* have struck every student of History who at the same time cares about contemporary politics, that there is one strange discrepancy between the record of politics in the past and his own consciousness of politics in the present. When he thinks over his political views, makes a speech or argues, he is constantly appealing to ideals, such as Justice, Liberty, Christian principles, patriotism, and he believes that these ideals guide both him and his party. When he reads a good history, he will find the differences of parties and of nations expressed almost exclusively by divergences of interest. The interests of France clashing with the interests of Austria; the interests of the landed classes, the interests of the manufacturers, the interests of the Church—these come in history not as occasional factors in the life of nations habitually guided by Justice, Liberty and the rest of it: they come as permanent factors, as the main roots of action. It gives one a shock, this apparent cynicism of History. But the facts bear it out; and more, our own instinctive comments show that we expected it. From the beginning of the world till now it has been the same: farmers have always wanted corn to be dear; manufacturers have wanted labour to be cheap; slave-owners have always thought well of slavery; liquor sellers have always admired an increased consumption of liquor; aristocracies have always approved of their own privileges; leather-sellers have always held that more articles should be made of leather. The slave-owner produces a number of arguments explaining that slavery is a blessing to all concerned in it. The farmer writes pamphlets and books to show that Free Trade in corn will wreck the bases of society. "These," says the one, "are the reasons why I object to emancipation." "Those," says the other, "are the considerations that make me a protectionist."

History turns an amused glance at their reasons and observes, "The slave-owners naturally resisted emancipation. The farmers were, of course, protectionists." And we are not in the least surprised at her tone. If we find a slave-owning emancipationist or a farmer who believes that even if he loses by it, poor men

ought to have cheap bread, we either suspect his motives or we frankly admire him as a noble and exceptional man. Fortunately, amid the clash of interests, such men have often very great power. They act with the disinterested classes, and the disinterested classes can often save a country.

Still the unconscious ideals are what mainly guide mankind. And among the unconscious ideals there is one especially that is vast and permanent: the very centre of the Ego is stirred by it: the ideal of the man's own prosperity, success, expansion. "I love the thing that makes me great and rich and admired. I hate the thing that pulls me down and makes me small and of no account." And if you argue to me that the first thing is bad and the second good, do you suppose that the quivering centre of ambitious life within me will not cry in passionate denial: "No, the thing that hurts me is bad, cruel, treacherous: the thing that soothes and helps me is good." Do you suppose it will not reach out its feelers north, south, east and west for weapons to help it and arguments to slay your arguments?

Self-interest—in no high philosophical sense. but in its ordinary acceptation—is a vast factor in private, in everyday life. But in private life it is strongly and vividly counteracted by social and moral forces which are almost powerless in politics. A farmer who could let his own labourer starve to death before his eyes rather than part with a slice of bread would be a monster. Men are prevented from doing such things by all kinds of natural instincts. But the landed classes who caused thousands to die of famine in 1842 and 1846, in order to keep up their incomes, were very good people indeed. Is that not a fair way of putting it? I think it is. True, they did not say they supported the Corn Laws in order to keep up their income: they said it was because they believed in certain arguments. But why did they believe these arguments? Why did all farmers enthusiastically believe all arguments—whether they understood them or not—that tended one way, while all starving artisans believed the contrary arguments? The farmers believed their arguments because they wanted good incomes: the artisans believed theirs because they valued cheap bread.

Mere straightforward self-interest, then, takes us a very long way in the explanation of politics. But obviously not the whole way. There are other instinctive elements. There is especially one other; this same growing and aspiring centre of life within us, the thing that in a baby or in Alexander the Great claims the whole world as its own, has other claims than the merely physical. When it has grasped all it can hold or hope for, when it is for the moment wearied with self-assertion, it likes to be stroked and praised, it likes to reflect upon its nobleness, justice and generosity. Consider the fowls of the air. A very pretty small bird, the Great Tit, when hungry, will lift up its beak, split open its brother's head and proceed to eat his brains. It might then be satisfied, think you? Not at all! It has a moral nature, you must please to remember, which demands to be satisfied as well as the physical. When it has finished its brother's brains, it first gets very angry and pecks the dead body; then it flies off to a tree and exults. What is it angry with and why does it exult? It is angry with the profound wickedness of that brother, in consequence of which it was obliged to kill him: it exults in the thought of its own courage, firmness, justice, moderation, generosity and domestic sweetness. That song is its equivalent—poor innocent thing—of a patriotic leading article in the *Kreuz Zeitung* or the *Daily Telegraph* or the *Petit Journal*.

Human nature cries aloud for self-approval: it winces and shudders at the first touch of self-reproach or self-contempt. There are obviously two ways of avoiding self-reproach. The tiresome and precarious way of not doing what you suspect to be wrong or contemptible: and the bold and comparatively safe way of always admiring whatever you yourself happen to do. With the bird above mentioned, this course seems to be easy: he can admire himself all alone. Man, weakened by his increased self-consciousness, has not only to praise himself, but must get others to praise him: must persuade them, argue with them, cajole them, bribe them, frighten them, till at last, amid the applause of all his immediate friends and associates, his sensitive and anxious soul can rest in peace. Hence comes hypocrisy, the deep unconscious hypocrisy that governs nations and satisfies man's craving for praise.

"This noble spectacle," to quote the phrase of a famous general about war, "has, after all, an unpleasant side to it." "Never forget," said a Greek sophist to a Greek tyrant, "never forget to slander those you have wronged." He need not have said it. There was a silent and eternal sophist, one may be sure, below the threshold of conciousness, who could be trusted to teach that tyrant, and every tyrant, to slander those whom he had wronged or meant to wrong. "If they are good men," his heart cried within him, "I must be bad! And that I will never be! They are not good men: they are vile and wicked, and they hurt me; and I wish I could kill them over again!" The whole vast force of the unconscious self will, we may be sure, be exerted before all else in these three directions: he will insist on his own satisfaction: he will insist on his own goodness, and he will slander restlessly and ruthlessly those who make him feel sore.

Progress, moral advance, the upward movement of humanity consists mainly in the constant subjugation and direction of unconscious self by the conscious. On the one hand we gain more power of knowing ourselves: on the other hand the unconscious beast below the threshold itself becomes changed; our actual instincts become a little civilized. This is obvious: it is generally taken for granted. What is not taken for granted is the extreme precariousness and superficiality of the process. If you scratch a Russian, it is said, you find a Tartar. And I dare say if you scratch any civilized European pretty deep, you will find something much the same. Nay, sometimes when the deeps of primitive passion are stirred, you may look deeper still, and get glimpses of that wonderful creature on whom our being is based, the great Ape that differed from other apes by its upright posture, its intelligence, its ambition, its exquisite sensitiveness to suffering, and by the fact that alone of the ape tribe it was a ravening beast of prey.

It pains us, of course, to be reminded of the beast's existence. A certain shock was felt the other day in the House of Commons when a Cabinet Minister drew a distinction between Honourable Members and Honourable Men. Yet no one can possibly deny that it is a real distinction. O'Connell in 1838 said it was "horrible to think that a body of gentlemen—men who ranked high in society, who were themselves the administrators of the law, and who ought, therefore, to be above all suspicion—should be perjuring themselves in the (Election) committees of the House of Commons." Now as a matter of fact they were prejuring themselves. It was well-known. The leader of the Opposition knew it. The Government admitted it. The Law Officers of the Crown had remarked upon it. But the political instincts of the Great British nation objected utterly to having such a thing mentioned in public—especially by an Irishman. O'Connell was condemned, reprimanded and very nearly sent to Newgate. It is the first maxim of decent society, that the existence of the beast within us should be concealed. It is the first necessity of all honest striving for self-improvement, as it is of all true philosophic study, to remember that the beast is there.

இதனை இவர் எழுதி முப்பது வருடங்களுக்கு மேலாயினும், இன்றைய செய்தியும் அதுவே யல்லால் வேறில்லை.

# தமிழ்ப் பாடம் 32.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[604-வது பக்கத் தொடர்ச்சி]

மனைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேனால்—நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர் நாடா
இவளைப் பணயந்தா வின்று. 49.

பதப்பிரிவு:—மனைக்கு உரியார் அன்றே வரும் துயரம் தீர்ப்பார் சினை சங்கின் வெள் தலையை தேனால் நனைக்கும் குவளை பணை பை தாள் குண்டு நீர் நாடா இவளை பணயம் தா இன்று.

அன்வயம்:—சினைச்சங்கின் வெண்தலையைத் தேனால் நனைக்கும் குவளைப் பணைப்பைந்தாள் குண்டுநீர் நாடா, வரும்துயரம் தீர்ப்பார் மனைக்குஉரியார்அன்று. (ஆதலால்)இன்று இவளைப் பணயம் தா.

கருத்து:—யாவையுமிழந்து இனிப் பந்தயத்திற்குப் பொருளில்லாமல் ஏங்கிய நளனுக்குப் புட்கரன் அருகிருந்த தமயந்தியைக் காட்டி, "இவளைப் பந்தயமாக வை," என்று கேட்டான்.

பதவுரை.

சினை - சூல் கொண்ட
சங்கின் - சங்கினது
வெள் - வெண்மையான
தலையை - தலையை
தேனால் - தேனினால்
நனைக்கும் - நனைக்கின்ற
குவளை - குவளைகளினது
பணை - பருத்த
பை - பசுமையான
தாள் - தண்டுகள் அடர்ந்த
குண்டு - ஆழமான
நீர் - நீர்நிலைகளை யுடைய
நாடா - நிடதநாட்டோனே,
வரும் - ஒருவனுக்கு வந்த
துயரம் - துன்பத்தை
தீர்ப்பார் - தீர்க்கின்றவர்கள்
மனைக்கு - வீட்டிற்கு
உரியார் - உரியவர்களாகிய மனைவியர்
அன்றே - அல்லர் (ஆகையால்)
இவளை - இந்தத் தமயந்தியை
இன்று - இப்பொழுது
பணயம் - பந்தயமாக
தா - கொடுத்துவிடு

விளக்கம்:—புட்கரன் நளனை என்னவென் றழைக்கின்றான்? நாடா - நாட்டையுடையவனே. எப்படிப்பட்ட நாடா? நீர் நாடா - நீர்நிலைகளுள்ள நாடனே. எப்படிப்பட்ட நீர்நிலைகள்? குண்டுநீர் - ஆழமான நீர்நிலைகள். எதை உடைய குண்டுநீர்? தாள் குண்டுநீர் - தண்டுகளையுடைய ஆழமான நீர்நிலைகள். எப்படிப்பட்ட தாள்? பைந் தாள் - பசுமையான தண்டுகள். இன்னு மெப்படிப்பட்டவை அத்தண்டுகள்? பணைப் பைந்தாள் - பருத்த பசுமையான தண்டுகள். எதனுடைய பருத்த பசுமையான தண்டுகள்.? குவளைப் பணைப் பைந்தாள் - குவளைகளினது பருத்த பசுமையான தண்டுகள். என்ன செய்யும் குவளைகளினது பருத்த பசுமையான தண்டுகள்? நனைக்கும் குவளை - நனைக்கின்ற குவளை. எதனால் நனைக்கும்? தேனால். எதைத் தேனால் நனைக்கும்? தலையைத் தேனால் நனைக்கும். எதன் தலையை? சங்கின் தலையை. எப்படிப்பட்ட சங்கின் தலையை? வெண் சங்கின் தலையை. அச்சங்கு எப்படிப்பட்டது? சினைச்சங்கு-சூல் கொண்ட சங்கு.

சூல்கொண்ட சங்குகளின் வெண்மையான தலைகளைத் தன்னிலிருந்து வழியும் தேனினால் நனைகின்ற குவளைகளின் பருத்த பசுமையான தண்டுகளடர்ந்த ஆழமான நீர்நிலைகளை யுடைய நாட்டையுடையவனே, என்று புட்கரன் நளனை அழைத்து என்ன சொல்கிறான்? தா - கொடு, என்று கேட்கின்றான். யாரைத் தா? இவளைத் தா - இங்கிருக்கின்ற தமயந்தியைக் கொடு. எப்பொழுது? இன்று - இப்பொழுது. இப்பொழுது இவளை எதுவாகக் கொடு? பணயம் தா - பந்தயமாகக் கொடு.

ஏன் அவளையும் பந்தயம் வைத்து நளன் தோற்றுவிட வேண்டுமாம்? அன்று - அல்லர் ஆகையால். என்ன அல்லர். தீர்ப்பார் அன்று - தீர்ப்பவர் அல்லர். எதைத் தீர்ப்பார் அல்லர்? துயரம் தீர்ப்பார் அன்று. எந்தத் துயரம் தீர்ப்பார் அல்லர்? வரும் துயரம் தீர்ப்பார் அல்லர் - கணவனுக்கு வந்த துன்பத்தைத் தீர்ப்பவர்களல்லர். யார் வரும் துயரம் தீர்ப்பார் அல்லர்? மனைக்கு உரியார் - மனைவியர்.

விரிவுரை:—இச்செய்யுளின் முதலடிக்கு, "மனைவிகள் வருகின்ற துயரத்தைத் தீர்ப்பவர்கள் ஆவார், ஆதலால் தமயந்தியை நான் அடையுமாறு அவளைப் பணயம் கொடு" என்று பொருள் கூறுவார் பிறர். இப்பொருள் பொருத்தமுடைய தன்று எனத் தோன்றுகின்றது. எவ்வளவுதான் கொடியவனுகப் புட்கரன் இருந்தாலும், "உன் மனைவியை எனக்கு மனைவியாகக் கொடு" என்று நளனையே கேட்டானெனல் தகவற்றதாகும். அதுவுமன்றி, அவளால் இன்பம் எய்துவதற்கு என்று கேட்காமல் துயரம் தீர்வதற்கென்று கேட்பானேன். அரசெலாம் சூதினால் வென்று களிக்கின்ற புட்கரனுக்கு இப்பொழுது தீரவேண்டியதாகிய துயர் எத்துபருளது? அன்றே, என்பதை அல்லரோ,என்று பொருள்படுத்தி மனைக்குரியார் என்பதுடன் சேர்ப்பதால் இந்த அர்த்தம் வரும். இவ்வாறன்றி, அன்று என்பதை முன்போலவே அல்லர் எனப் பொருள்படுத்தி, "மனைக்குரியார் வருந்துயரம் தீர்ப்பார் அல்லர்" என்றெடுத்து அதனைத் தீர்ப்பார் என்னும் வினையாலணையும்பெயரோடு சேர்த்துக்கொண்டு, ஏகார இடைச்சொல்லைத் தேற்றப்பொருளில் வந்திருப்பதாக வைத்தால், முன் சொன்னபடி அர்த்தத்தின் பொருத்தம் பிறழாமல் காக்கப்படும். இப்பொருளில் அடங்கிய கருத்து—"நளனே, நீ நாடு நகரமெல்லாம் இழந்து துன்பம் அடைந்தாய். இந்தக் கஷ்டகாலத்தில் மனைவியும் உன்னோடு கூட இருப்பது நல்லதன்று. ஆதலால் அவளையும் கொடுத்துவிடு" என்று விரியும். என்ன காரணம் பற்றிக் கஷ்டகாலத்தில் மனைவியும் கூட இருப்பது நல்லதன்று என்று புட்கரன் உரைக்கின்றான்

என்பது வெளிப்படையாயில்லை. 'வரும் துயரம் தீர்ப்பவர் மனைவியர் அல்லர்,' என்றதில் அத் துயரத்தை அவர் மேன்மேலும் தூண்டிக்கொண்டிருப்பர் என்னும் குறிப்பு இருக்கின்றது. "உன்னாலே யல்லவோ இவ்விடுக்கண் எமக்கு வந்தது" என்று அடிக்கடி இடித்துரைத்துக்கொண்டே மனைவியர் இருத்தலும் கூடும். இது உத்தம மாதர்களுக்குப் பொருந்தா தென்பது உண்மையே. ஆனால் புட்கரன் போன்ற ஓர் கயவனது புத்திக்குக் கீழானநோக்கமேதோன்றுவது இயற்கையுமாகும். அல்லது அவன்உயர்ந்த நோக்கத்தாலும்,"துன்பம்வந்தகாலையில் மனைவியர் உடனிருந்தால் அத்துன்பம் தீராவகை மேன்மேலும் விளைவிப்பார்" என்று கூறியுமிருக்கலாம். துன்பமுற்ற கணவனுக்குத் தன்னோடு சேர்ந்து மனைவியும் துயருறக் காணுந்தோறும், அவன் துயர் அதிகரிக்கும். பின்வரும் 56-வது செய்யுளில் இதற்கு ஆதாரமும் இருக்கின்றது. அதுவும், மதியிழந்து தானாடிய சூதினால் அவளும் கஷ்டப்படவேண்டி யிருக்கின்றதென்றால் உற்றதுயர் பின்னுமதிகம். ஆதலால்,"என் துயர் தீர்ப்பதற்கு இவளைத் தா," என்பதைவிட "உன்துயர் இவளிருக்கத் தீராதாகையால், கொடுத்துவிடு" என்று புட்கரன் இங்குக் கூறுவதே அமையும். இருவகையினும் பிறன்மனைவியைக் கேட்கின்ற இழிவு எஞ்சியே நிற்கின்றது.

நைடதத்தில்போ லல்லாமல், புகழேந்திப் புலவர், நளன் சூதாடுமிடத்தில் தமயந்தி இருக்கும்படி செய்த நயம் பாராட்டத்தக்கது. அருகிருந்து சூதாடுகின்றதைப் பார்த்திருந்தாளாயினும் தன்நாயகன் தனக்குக் கடவுளாதலால் அவன் செய்வதற்கு எதிராக ஒன்றுஞ் செப்பாது உடன்பட்ட கற்புடைய மாதரசி தமயந்தி என்று காட்டுவதற்கே போலும் புகழேந்தி இவ்வாறு அமைத்தனர். 'நலம்வருக தீதுவருக சிந்தையால் சூது பொர இசைந்து சொல்லினேம்,' என்று நளன் சொன்னபிறகு தமயந்தியும், நலம்வரினும் தீதுவரினும் அதற்கு உட்படுவதே முறையெனக் கொண்டனள். தொழுநோய் கொண்ட கணவனை வேசிவீட்டிற்குக் கொண்டு போய்விட்ட நளாயினியின் கற்பும் இத்தரத்ததாகும். பாம்பின் வாய்ப்பட்டுப் புலம்பும்போது தமயந்தியின் கற்புநிலை வைபவத்தைப் பின்னர் இங்கு முடியக்காண்போம்.

---

இனிச்சூ தொழிந்தோ மினவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனனாடன் பொன்மகளே
நாம்போது மென்றா னளன். 50.

பொழிப்புரை: (தமயந்தியைத் தரும்படி புட்கரன் கேட்க, உடனே) நளராசன் (தமயந்தியைப் பார்த்து) "இனி இந்தச் சூதாட்டத்தை விட்டோம். கனிகள் நிறைந்த மாமரச்சோலையிலே வண்டின் கூட்டங்கள் குளிர்ச்சிபொருந்திய மாம்பூவைக் காலால் கிண்டித் திறக்கும் நீர்வளம்மிகுந்த விதர்ப்ப நாடுடையவனது அழகிய மகளே, நாம் போவோம் வா," என்றான்.

விரிவுரை:—அரசினைச் சூதாடித் தோற்றுக் காட்டிலே தன் கடவநாள் கழித்திருந்த பாண்டவர்களுள் தருமனுக்கு வியாசர், "சூதாடிக்கேடு எய்துவது, அரசர்களுக்கு இயல்பே, ஆதலால் நீ கலங்கவேண்டா" என ஆறுதல் கூற, அப்போது தருமன் தன்போன்று கவறாடித் தீதுற்ற வேந்தன் வேறொருவன் உண்டோ என்று வியந்ததற்கு வியாசர் உண்டு என்று நளனுடைய சரித்திரத்தை எடுத்துச் சொல்கின்றார். ஆகையால் நாம் படிக்கின்ற இந்நூலி னுள்ளதொன்றும் கவிக்கூற்று அன்றென்று ஒருவிதத்தில் சொல்லலாம். வியாசர் சொல்லத் தருமர் கேட்பதுபோல் புகழேந்தி அமைத்திருக்கின்றார்.

ஆகையால் 'இனிச் சூது ஒழிந்தோம்' என நளன் சொன்னதாக வியாசர் கூறிய இச்சொற்கள் தருமனது மனதில் முள்ளைப்போல் தைத்திருக்கும். மதி சிறிது இழந்துபோய் நளன் சூதிலே மோகங்கொண்டு ஆடினாலும், தன் மனைவிமீது அவனுக்கு மெய்யான காதல் இருந்ததால், அவளைத் தா என்று புட்கரன் கேட்டதும், புத்தி தெளிந்து சூதாட்டத்தை நிறுத்திவிட்டான். தருமனோ, தங்களையே அல்லாமல் தம் மனைவியையும் பணையமாய் வைத்திழந்தானாதலால், இருவரும்ஆடியது பொய்ச்சூதே எனினும் அச்சூதிலும்தன் சிறுமைதோன்றச் சிந்தை உழன்றிருத்தல் இயல்பே.

---

மென்காற் சிறைபன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்-தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினா னன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. 51.

பதவுரை.

மென் - மெல்லிய
கால் - கால்களையும்
சிறை - இறகுகளையும் உடைய
அன்னம் - ஓர் அன்னப்பறவை
வீற்று இருந்த - பெருமையோடு அமர்ந்திருந்த
மென் - மிருதுவான
மலரை - தாமரைமலரை
புன் - அற்பமாகிய
காகம் - ஒரு காகமானது
கொள்ள - அடையும்படி
தான் - அவ்வன்னம்
போனால்போல் - மலரைவிட்டு நீங்கியது போல்,
கொடியானுக்கு - கொடியவனாகிய புட்கரனுக்கு
அ - அந்த
பார் - பூமியை
கொடுத்து - கொடுத்துவிட்டு
அன்றே - அப்பொழுதே (நளன்)
தன் - தன்னுடைய
கால் - கால்கள்
பொடி - தெருப்புழுதி
ஆட - படிய
தேவியொடும் - மனைவியாகிய தமயந்தியோடும்
போயினான் - போனான்.

விரிவுரை:—மெய்ம்மை நளன், ஆதலால் ஆடியது சூதானாலும் அதனிற் கொடுத்தவாக்கையும் காத்துத் தான் தோற்ற நாடெலாம் புட்கரனுக்குக் கொடுத்துவிட்டான். "தோற்றால்தான் என்ன! விளையாட்டுச்சூதில் நிடதநாட்டையே கொடுத்துவிடுகின்ற மதியிலி நான் அல்லன், தரமாட்டேன் போ!" என்று நளன்சொல்லியிருப்பானானால் புட்கரனால் என்ன செய்திருக்க முடியும். வழக்கெடுக்க இடமில்லை, எடுப்பினுஞ் செல்லாது. நளனுக்கு எதிரே போர்தொடுக்கும் ஆற்றல் அவனுக்கு இலது. ஆதலால், தான்சொன்னசொல்லைக்கடைபிடிக்க நளனுக்கு, புறத்திலிருந்து எவ்விதத் தூண்டு

தனும் இல்லை. அகத்தில் நின்ற அறத்தின் பற்றினால் அவன் மேற்கொண்ட வாய்மையே வாய்மை.

இச்செய்யுளில் அடங்கிய உபமான உபமேயங்கள் வெளிப்படை. நளன் ஆண்ட நாட்டைத் தகுதிபற்ற புட்கரன் ஆள்வதென்பது, அன்னம் இருந்தகன்ற பின் தாமரைமலரில் சென்று உட்காரும் காகத்தைப் போன்றான் என்றால், அவனுடைய புன்புத்திக்கும் பார்ப்பவர் பரிகசத்திற்கும் இதுவொன்றே போதும்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[606-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 5-ம் பதிகம்.
7-ம் பாசுரம்.

நீர்மையில் நூற்றுவர் வீய
　　ஐவர்க் கருள்செய்து நின்று
பார்மல்கு சேனை யவித்த
　　பரஞ்சுட ரைநினைந் தாடி
நீர்மல்கு கண்ணின ராகி
　　நெஞ்சங் குழைந்து நையாதே
யூன்மல்கி மோடு பருப்பா
　　ருத்தமர்கட் கென்செய் வாரே.

"பாண்டவர் பக்கலுள்ள வாச்சல்யத்தாலே அவர்களின் விரோதிகளான துரியோதனாதிகளையும் மற்றுமுள்ள பிரதிகூலவர்க்கத்தையு மடங்கக் கண்டித்தழித்து அதுவே தனக்கு நிரவதிக தேஜஸாக இருந்தருளினவனை நினைத்து நீர்மல்கு கண்ணினராகி நெஞ்சு குழைந்து நையாதே கேவலம் சரீரபோஷகரா யிருப்பார் இந்த ஸ்ரீவைணவர்கள் விளங்குகின்ற தேசத்தில் என் செய்ய உள்ளராய் இருக்கிறார்கள், என்கிறார்" ஆறாயிரப்படி.

---

8-ம் பாசுரம்.

வார்புன லந்தண் ணருவி
　　வடதிரு வேங்கடத் தெந்தை
பேர்பல சொல்லிப் பிதற்றிப்
　　பித்த ரென்றே பிறர்கூற
ஊர்பல புக்கும் புகாது
　　முலோகர் சிரிக்கநின் றாடி
ஆர்வம் பெருகிக் குனிப்பா
　　ரமரர் தொழப்படு வாரே.

பதக்குறிப்புக்கள்:—பேர்பல சொல்லிப் பிதற்றி - பிரீதியினாலே கிரமாகிரமமில்லாமல் அவன்நாமங்களைச் சொல்லி. ஊர் பலபுக்கும் புகாதும்-சில ஊர்களில் தங்கியும் வேறுசில ஊர்களில் தங்காமலும்; ஆர்வம்பெருகி - நிஜமான பக்திவளர்ந்து...குளிர்ந்த அருவிகள அடர்ந்து பாயும் வடதிருவேங்கட மலையிலிலே நின்றருளித் தாஸர்களை அநுக்கிரகிக்கும் திருவேங்கடமுடையானுடைய திருநாமங்களைச் சொல்லிப் பிதற்றிச் சாதாரண ஜனங்கள் பித்தரென்று சிரிக்க, மனுஷர் பார்க்கவும் பார்க்காதிருக்கவும் ஒரேமாதிரி பக்தியுடன் ஆசை மிகுந்தவர்கள் நித்தியசூரிகளால் ஸேவிக்கப்படுகிறார்கள்.

---

9-ம் பாசுரம்.

அமரர் தொழப்படு வானை
　　யனைத்துல குக்கும் பிரானை
அமர மனத்தினுள் யோகு
　　புணர்ந்தவன் றன்னொ டொன்றாக
அமரத் துணிய வல்லார்க
　　ளொழிய வல்லாதவ ரெல்லாம்
　　அமர நினைந்தெழுந் தாடி
　　　　யலற்று வதேக ருமமே.

அவதாரிகை:—யோகாப்பியாஸம் செய்யத் துணியும் சிற்சிலர் தவிர மற்றவர்கள் எல்லாரும் எல்லா உலகங்களுக்கும் பிரபுவான பகவானை மனதாரப் பிரீதியுடன் நினைந்து ஆழ்ந்த பக்தியுடன் தொழுது ஆடிப்பாடி மாலேறிப் பிதற்றுவதே பயனென்றும் கடமை யென்றும், அருளிச் செய்கிறார்.

குறிப்புக்கள்:—அமர-ஸ்திரமாக, மனத்தினுள்-தங்கள் மனசுக்குள்ளே, யோகு புணர்ந்து - யோகத்தில் சேர்ந்து, அவன் தன்னோடு-பரமாத்மாவோடு, ஒன்றாக-சமமாக ஆவதற்காக, அதாவது தேவனாகவும் மனுஷியனாகவும் ஆத்மாக்கள் புகுந்திருக்கிற சரீர வியவஸ்தை யன்றிக்கே அவைகளில் தேஹேந்திரிய மனசு பிராணன்கள் கழியும்போதும் அழியாதே ஸ்திரமாய் இவற்றிற்கு நியந்தாவாய் நிற்கிற ஆத்ம சுவரூபம் பரமாத்மாவை ஒத்திருக்கும் ஸாமியத்தை, அமர - ஸ்திரமாகப் பெற்றுக் களிக்க, துணியவல்லார்கள் - மனோதைரியத்துடன் இருப்பவர்கள்-(சரியான விவேகமுள்ளபுத்திமான்கள், இவ்வண்ணம் அசாத்தியத்தில்முரட்டுத்தனமாய் முரணான மன அத்தியாவஸாயத்தைச் செய்யார் என்று திருவுள்ளம்). இப்படி யோகம் செய்யச் சக்தர்களென்று தம்மை நம்பிப் பரிசுத்த ஆத்ம சுவரூபத்தைக் கண்டுகொள்ள யத்தனிக்கும் யோகாப்பியாச நிஷ்டர்கள் பக்தியோகம் செய்யாமல் வாளாவிருக்கலாம்; மற்றவர்களுக்கு யோகம் கூடாது.

குறிப்பு:—ஆழ்வார், மேல் 8-ம் பத்து 8-ம் தசகம் 5-ம் பாசுரத்தில், இந்தப் பரிசுத்தாத்ம சுவரூபம் எவ்வளவு உத்கிருஷ்டருக்கேனும் யோகு புகுவதால் கிடைப்பதரிதுஎன்று அருளிச்செய்கிறார். பகவான் திருவருளால் இந்த ஆத்மசுவரூபம் தனக்குக் காட்சியாயிற்று என்றும் உரைக்கிறார். எவ்வாறாவது முயற்சி செய்து ஆத்மசுவரூபத்தைக் காணவேணுமென்றால், தேஹமரணகாலத்திலும், 8-வது பாசுரத்தில் கூறுவது போல், "எம் பெம்மானோடு ஒத்தேசென்று" அங்கு அந்தப் பிரத்தியேகமான தன்னுடைய ஆத்ம வஸ்துவிலே உள்ளம் கூட வேண்டும்" ("எம்பெருமானோடு"-என்னுடைய ஸ்வாமியாகிற பரமபுருஷனோடு "ஒத்துச் சென்று" - அவனுக்கு ஸமானமாகவே மனதில் நினைப்பு நடைபெற்று, உள்ளம் கூடவேண்டும் - மனது உறுதிப்பாடாக நிலைபெற வேண்டும்) இப்படி நிறைவேறாவிடில் யோகம் சிதைந்துபோம். இதனை யாம் நம்முடைய உபோத்காதத்தில் பரக்கப் பேசியும், 1-ம் பத்து 7-ம் தசகத்தில் ஒருவாறு விவரமாக எடுத்துக் கூறியு முளோம். அங்குக் கண்டுகொள்க. இனி இங்கு மற்றொரு விஷயம் குறிக்கத்தக்கது. இந்தப்பாட்டு, பகவத்கீதை ஆறும் அத்தியாயம் 23-சுலோகத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாகக்காணப்படும். அங்கு

"ஸர்வபூதஸ்திதம் யோமாம் பஜேத் தியேகத்துவமாஸ்தித:"-ஆத்ம வஸ்துவைப் பரம்பொருளோடு "யேகத்துவமாக"—அதாவது இப்பாசுரத்தில் "ஒன்ருக" என்பதுபோல்—யோகிகள் நினைக்கக்கடவரென்று கூறப்பெற்றிருக்கிறது. நாம் உரையிட்டிருப்பதில் "ஒன்ருக" என்பதற்கு ஸமாநமாக வென்று அர்த்தம் கூறியுள்ளோம். இதற்கு ஆதாரம் மேல் மேற்கோளாக எடுத்துள்ள 8-ம் பாசுரமே. ஸ்ரீராமாநுஜ முனியும் கீதாபாஷியத்தில் இப்படியே மேல்கண்ட கீதாசுலோகத்துக்கு உரையிட்டருளியிருக்கிருர். மேலும் பரமாத்ம ஜீவாத்ம சுவரூபங்களுக்கு ஏகபாவத்தை (அதாவது ஒன்றென்று அறுதியிடும் மதத்தை) ஆழ்வார்காலத்திற்கு முன்னுலே "ஔடலோமி" என்கிற ரிஷி ஸித்தாந்தம்செய்ததாகவும், அது தத்துவத்துக்கு ஏலாதென்றும் வியாஸபகவான் வேதாந்த சூத்திரத்தில் அறுதியிட்டிருப்பதற்கேற்ப, மேல்படி 8-ம் பத்து 8-ம் தசகம் ஒன்பதாவது பாசுரத்தில் ஆழ்வார் கண்டித்துள்ளதைக் கவனித்து "ஒன்ருக" என்ற பதத்திற்கு "ஸாமியம்" என்ற அர்த்தமே தகுதியென்பதைக் கவனிக்கவேண்டும்.

---

10-ம் பாசுரம்.

கருமமுங் கரும பலனு
  மாகிய காரணன் தன்னைத்
திருமணி வண்ணனைச் செங்கண்
  மாலினைத் தேவ பிரானை
ஒருமை மனத்தி னுள்வைத்
  துள்ளம் குழைந்தெழுந் தாடிப்
பெருமையும் நாணும் தவிர்ந்து
  பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே.

புண்ணிய பாப கருமங்களுக்கும் அவைகளின்பலன்களுக்கும் நிர்வாஹகனுய் ஸர்வ ஜகத்காரணமாய் நீல ரத்நகாந்தி சதர்சனுப்ச் செந்தாமரைக் கண்ணனுய்த் தேவர்பிரானுகிவிளங்குகின்ற எம்பெருமானை நிரதிசய பக்தியுக்தராய் யாதொரு காரியநிமித்தமில்லாமலும் அவனது பிரீதி தவிர மற்றென்றையும் மனதில் வைக்காமலும் வெட்கம் கவுரவம் இவற்றைவிட்டு ஆடி அழிவு கேடு நிவர்த்தராய்க் கிரமமாகவும் அக்கிரமமாகவும் ஸ்துதி செய்யுங்கோள்.

---

11-ம் பாசுரம்.

தீர்ந்த வடியவர் தம்மைத்
  தீர்த்துப் பணிகொள்ள வல்ல
வார்ந்த புகழச் சுதனை
  யமரர் பிரானை யெம்மானை
வாய்ந்த வளவயல் சூழ்தண்
  வளங்குரு கூர்ச்சட கோபன்
நேர்ந்த வோராயிரத் திப்பத்
  தருவினை நீறு செய்யுமே.

பதக் குறிப்புக்கள்:—தீர்ந்த அடியவர்-பகவானது திருவடிகளை மோக்ஷத்திற்கு உபாயமென்றும் அவை தான் மோக்ஷத்தில் அடையவேண்டிய புருஷார்த்தமென்றும் நம்பும் தாஸர்கள். தீர்த்து-பகவானையடையவொட்டாது நிற்கும் பாபங்களிலிருந்து விடுத்து. பணிகொள்ள வல்ல - தனக்குத் தாஸிய கைங்கரியத்தில் இழியச்செய்யுஞ் சக்தியுள்ள, அருவினை-கடினமான பாபங்களை, நீறு செய்யுமே-பஸ்மமாக்கிவிடும், அழித்துவிடும். இப்பத்து, பாவிகளையுங் கூடச் சுத்தராக்கிப் பகவானிடத்தில் கைங்கரியம் செய்ய யுக்தராக்கும்.

குறிப்பு:—இந்தத் தசகத்தை வைணவர்கள் தினந்தோறும் ஸந்தியாவந்தனத்திறுதியில் அநுஸந்திப்பது புராதீனமான வழக்கம்.

---

# எல்லாம் வீணே?

## ஒரு சிறு ஈரங்க நாடகம்

[611-வது பக்கத் தொடர்ச்சி]

## இரண்டாவது அங்கம்

---

### இரண்டாம் களம்

இடம்:—கோதண்டராம ஐயர் வீடு.

காலம்:—முற்பகல்.

[சக்ரபாணி ஐயரும், அவர் மனைவி சுப்புலக்ஷ்மியும், அவர் பெண் ஜானகியும் வருகிருர்கள்.]

சுப்புலக்ஷ்மி:—இதோ பாருங்கள். அவனையும் கையுடன் அழைத்துக்கொண்டு வந்திருந்தால் இரண்டு மூன்று ஸெகண்ட் கிளாஸ் டிக்கட் வாங்கவேண்டுமென்று காசு செலவழிக்கப் பயந்து திருச்சிராப்பள்ளியில் வேலைஎன்று ஒரு பொய்யையும்சொல்லிவிட்டுவந்தீர்களே, அதன் லாபம் பலித்ததா. இதோ என்ன சிரமம், எத்தனை செலவு பாருங்கள். கருமிக்கு எப்பொழுதும் இரட்டைச் செலவுதானே.

சக்ரபா:—கிடக்கிறது விட்டுவிடேன். எத்தனைதரம் சொல்லிக்காட்டுவாய். ஜானகி நீ, சமத்தாய்இருக்க வேண்டும். என்ன கேட்கிருர்களோ அதற்கு மாத்திரம் பதில்சொல், தெரியுமா. நீயாக ஒன்றும்உளறி வைக்காதே!

ஜானகி:—அவர்கள் என்னை ஒன்றும் கேட்காமற்போனுல் அப்பொழுது என்ன பண்ணுவேன்.

சுப்புலக்ஷ்மி:—சும்மா உன் வாயை அடைத்துக் கொண்டிரு.

சீனுவாசமூர்த்தியும் கோதண்டராம ஐயரும் வருகிருர்கள். சுப்புலக்ஷ்மியும் ஜானகியும் உள்ளே போய்விடுகிருர்கள்.

கோத:—உட்காருங்கள். நீங்களே வந்துவிட்டது ரொம்ப நல்லதாய்ப் போயிற்று ஸார். உத்தேசித்தது போல் திருச்சிராப்பள்ளியில் இறங்கவில்லை போலிருக்கிறது. இருந்தால் இன்றைய தினம் இங்கே வந்திருக்க முடியாது.

சக்ர:—இல்லை. எப்படி எப்படியோ உத்தேசிக்கிருேம். பல அலுவல்களில் எப்படி எப்படியோ முடிகிறது. அம்மா, குழந்தை, ஜானகி! [ஜானகி வருகிருள்] இவர்களுக் கெல்லாம் நமஸ்காரம் பண்ணு, பார்ப்போம். (ஜானகி கோதண்டராம ஐயருக்கும் சீனுவாசமூர்த்திக்கும் நமஸ்காரம் பண்ணுகிருள்.)

கோதண்:—இந்தா அம்மா, உங்கப்பாவிற்கும் 'து' பண்ணனும். (ஜானகி சிரித்துக்கொண்டே சக்ரபாணி ஐயருக்கும் நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போகிறாள்.)

சீனு:—(ஒரு புறமாய்) இந்தப் பெண்ணின்முகம் வெகு சுறுசுறுப்பாய் இருக்கிறதே. இவளுடன் நான் எப்படியும் பேசிப்பார்க்கவேண்டும். [போகிறான்]

கோதண்:—பெண்களுக்குள் பேசிக்கொள்ளட்டும். எனக்குக் கொஞ்சம் வெளியில் போகவேண்டிய வேலை இருக்கிறது. நீங்களும் வருகிறீர்களோ, போய்விட்டு வரலாம்?

(போகிறார்கள்.)

சக்ர:—நல்லது, வருகிறேனே.

[சீனுவாசமூர்த்தி வருகிறான்]

சீனு:—இதுவே நல்ல சமயம். எங்கே இந்தப் பெண்? இதோ வருகிறாளே. நான் இருப்பது தெரிந்தால் வரமாட்டாள். (கதவண்டை ஒளிந்துகொள்கிறான். ஜானகி வந்து இவனைப் பார்த்துத் திடுக்கிடுகிறாள்) என்ன ஜானகி, என்ன பயம்? ஏன் என்னுடன் பேசமாட்டேன் என்கிறாய்? என்னைக்கண்டால் பிடிக்கவில்லையா உனக்கு?

ஜானகி:—இல்லை.......

சீனு:—இல்லையா!

ஜானகி:—இல்லை, வந்து, அம்மா, என்னை, வந்து (எச்சில் முழுங்குகிறாள்) வந்து, அம்மாள் வந்துவிடுவாள்...நான் போகிறேன்.

சீனு:—(தனக்குள்) பேச பயப்படுகிறாள். அவ்வளவுதான். ஏனம்மா, உனக்கு என்ன வயதாச்சு?என்ன படிக்கிறாய்? பிடில் வாசிக்கத் தெரியுமா? எல்லாம் சொல்லேன்.

ஜானகி:—எனக்கு, வந்து, பதிமூன்று வயசாச்சு. தமிழ் நன்றாய் வாசிப்பேன். இங்கிலீஷ் வந்து கொஞ்சம் வாசிப்பேன். பிடில் வந்து இரண்டு மூன்று வருஷமாய்க் கற்றுக்கொடுக்கிறார்கள். வந்து, கொஞ்சம் கொஞ்சம் வாசிப்பேன்.

சீனு:—அப்படிச் சொல்லேன் தைரியமாய், என்ன பயம். என்னை'வந்து'கலியாணம் பண்ணிக்கொள்ள இஷ்டந்தானே உனக்கு?

(ஜானகி தலையைக் குனிந்து சிரிக்கிறாள்.)

[சுப்புலக்ஷ்மி வருகிறாள்]

சுப்புல:—என்ன மாப்பிள்ளை, பெண்ணைப் பார்த்தீர்களா? பிடித்திருக்கிறதா? குடும்பத்திற்கு ஏற்ற பெண்ணாய் இருப்பாள். இதற்குள்ளேயே நீங்கள் ரொம்ப சிநேகமாய்விட்டாப்போல் இருக்கிறதே.

சீனு:—பிடிக்காமல் என்ன! அவளுக்குத்தான் என்னைப் பார்த்தால் பிடிக்கிறதோ என்னவோ, என்று கேட்டுக்கொண்டிருந்தேன். அதற்குள் நீங்கள் வந்தீர்கள்.

சுப்புல:—வாயைத்திறந்து சொல்லுவாளா? வெட்கமாயிருக்காதா! அதுவும் எங்காத்துப் பெண்களெல்லாம் ரொம்ப அடக்கம். ஏண்டீ, ஜானகி, அப்படித்தானே?

சீனு:—நல்லது-பாக்கி எல்லாம் அம்மாவிடம் பேசி முடிவுபண்ணிவிட்டீர்களானால் எல்லாம் சரிதான்.

சுப்புல:—இனிமேல் 'பாக்கி' என்ன இருக்கிறது. இனிமேல் பாக்கி 'சீக்கி' ஒன்றுமில்லை—இதோ உங்களம்மா வருகிறாள், நாங்கள் உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் ஏதாவது எண்ணிக் கொள்வாள்.

(சுப்புலக்ஷ்மியும் ஜானகியும் போகிறார்கள்)

சீனு:—ஏது! இந்த மாமியாரம்மா கெட்டிக்காரி போலிருக்கிறதே. இந்தக் கலியாண விஷயத்தில் கொஞ்சம் சிரமம்கொடுப்பாள் என்பதற்குச்சந்தேகமில்லை.

(போகிறான்)

---

## மூன்றாம் களம்

இடம்:—கோதண்டராம ஐயர் வீடு.

காலம்:—பிற்பகல்.

(மீனாக்ஷியும் கோதண்டராம ஐயரும் வருகிறார்கள்.)

மீனாக்ஷி:—நம்ப, பிள்ளையைப் பார்த்தீர்களா! இந்தப் பூனையும் பாலைக்குடிக்குமா என்று இருந்துவிட்டு, இப்பொழுது அந்தப் பெண்ணைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்வேன் என்று ஒரு காலில் நிற்கிறானே. பெண் தேவலை...முதலில், கேட்கிற பணத்தைக் கொடுக்கிறேன்என்றார்கள். இதுதெரிந்ததும் ஒரு தம்படி காணமாட்டீர்கள் என்கிறாளே!

கோத:—பணம் என்னத்திற்கு! முக்கியமாய், பையனுக்குப் பெண் பிடித்திருக்கிறது. பின்னெ 'இது' பண்ணிவிடலாமே!

மீனாக்ஷி:— பணமில்லாமல் என்னத்தை 'இது' பண்ணுகிறது 'இது'! அப்புறம் விசாலத்தின் கதி அதோகதிதான்.

கோதண்:—அந்த இழவு ஒன்று இருக்கிறதே. இவர்களை எல்லாம் நன்றாய் 'இது' பண்ணிவிட வேண்டும்.

[சீனுவாசமூர்த்தி வருகிறான்.]

சீனு:—அம்மா, ரயிலிற்கு நாழியாய்விட்டதாம்... இரண்டிலொன்று தெரியவேண்டும் என்று அவசரப் படுகிறார்கள்.

மீனாக்ஷி:—போனால் போகட்டுமேடா. ஆயிரம் பெண் இருக்கு!

சீனு:—எனக்கு ஆயிரம் பெண் வேண்டாம். ஒரு பெண்தான் வேண்டும். அது ஜானகிதான்.

சக்ரபாணி ஐயர், சுப்புலக்ஷ்மி, ஜானகி, வருகிறார்கள்.

சக்ர:—எங்களுக்கு உத்திரவுதானே. ஏதோவந்தோம்; நீங்கள் கேவலம் பணத்தைப்பிரதானமாய் எண்ணுகிறீர்களே!

கோதண்:—நீங்கள் கேவலம் வார்த்தை புரள்வீர்களென்று நான் எண்ணவே இல்லை.

சுப்புல:—பெரிய மனுஷாளெல்லாம் இப்படிச் சொன்னால் எப்படி! போவோம் வாருங்கள். (சீனுவாசமூர்த்தியைப் பார்த்து) நீங்களென்ன பச்சைக்குழந்தையா? இத்தனைகையாலாகாதவராயிருக்கவேண்டாம். சரி, போய்வருகிறோம்.

(போலீஸ் உத்தியோகஸ்தர், நாராயணனைப் பிடித்துக்கொண்டு வருகிறார்.)

போலீஸ்:—அப்பாடா! என்ன சிரமம்போங்கள். ரயில் ஸ்டேஷனில் பிடித்தோம் ஸார், இந்த அயோக்யக் கழுதையை. தடையம் அகப்படவில்லை. முதலில் ஆள் இவன்தானா என்று தெரிந்துகொண்டால், அப்புறம்! கேட்கிறபடி கேட்டால் தானே கக்குகிறான்.

சக்ர:—என்ன, நாராயணா, இதென்னடாதிது! தடையமாவது-திருடனாவது-பெண்ணைத்தான் பண்ணிக்

கொள்ள மாட்டேன் என்றீர்கள். இந்த மரியாதை யாவது பண்ணவேண்டுமென்று!

விசாலம் வெள்ளிக் கூஜாவுடன் ஓடிவருகிறாள்.

கோதண்:—நாராயணன்தான் இவன். கூஜா எங்கே இருந்தது. என்ன பெரியபிசகு பண்ணிவிட்டோம்.

விசாலம்:—பீராவிலேயே இருந்தது—புடவையின் கீழ்.

கோதண்:—இன்ஸ்பெக்டர்வாள், நீங்கள் போகலாம்.

போலீஸ் உத்:—ஆனால், நான் பட்ட சிரமமெல்லாம் வீணு!

விசாலம்:—அண்ணு, பந்தயம் என்னவோ வைத்தோமே.

சீனுவாச:—ஆமாம், ஆமாம். இதோ கேள். அம்மா-பந்தயப்படி விசாலத்திற்கு நாராயணன்; எனக்கு ஜானகி; இரண்டிற்கும் பணம் வேண்டாம். ஆனைக்கும் பானைக்கும் சரியாய்ப் போயிற்று. என்ன சொல்கிறாய்?

சக்ரபா:—எங்களுக்குச் சர்வ சம்மதம்.

நாரா:—இத்தனை சுலபமாகவா முடிந்தது. சமைத்ததெல்லாம் வீணு!

[வெங்கடேசனும் திருநாவுக்கரசும் வருகிறார்கள்.]

சீனு:—திருநாவுக்கரசு நீ நல்லசமயத்தில் வந்தாய். நாம் எப்படி எப்படியோ எண்ணியிருக்க இரண்டு கலியாணமும் இப்பொழுதுதான் ஒன்றாய் முடிந்தது. நீ பண்ணின பிரசங்கமெல்லாம் வீண.

திரு:—நீ சொன்ன பொய்யெல்லாம் வீண். கிடக்கட்டும், வெங்கடேசன் தன்னை மறுபடி இங்கே வேலைக்கு வைத்துக்கொள்ள என்னைச் சிபார்சுபண்ண அழைத்து வந்திருக்கிறான்.

வெங்:—இரண்டு கலியாணம் நடக்கவேண்டுமென்று சொன்னதற்குத்தானே கோபித்துக் கொண்டீர்கள். அது வீண்தானே. நான் வேறுவேலை தேடினதும் வீண்தான்.

திரு:—இதோ உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது பார்.

சீனு:—(பிரித்துப் பார்த்து) இதுவும் வீணு! "பெண் படத்தைக் கேட்டிருந்தால் மறந்துபோய் உன்படத்தை அனுப்பிவிட்டால்'' என்று அந்தக் கழுதைப் படம் அனுப்பினவனுக்கு எழுதி, ஏதோ அவசரத்தில் என் மேல்விலாசத்திற்கே போட்டுக்கொண்டு விட்டேன். அது என்னிடமே வந்துசேர்ந்துவிட்டது போ!

சக்ர:—(கோதண்டராம ஐயரைப் பார்த்து) கடைசியில் நீங்களும் நானும் போட்ட சண்டை வீண்ஸார்.

கோதண்:--உங்கள் திருச்சிராப்பள்ளி வேலையும்வீண்.

மீனுக்ஷி:—(சுப்புலக்ஷ்மியைப் பார்த்து) கடைசியில், நீங்களும் நானுந்தான் அம்மா ஒன்றையும் வீணுக்கவில்லை!

ஜானகி:—(விசாலத்தைப் பார்த்து) கடைசியில், நல்லவேளை, உன்னையும் என்னையுந்தா னம்மா வீணுக்கவில்லை.

நாடகம் முற்றிற்று.

# நெய்தற்கலியுள் ஓர் செய்யுள்

"கற்றோர் ஏத்தும் கலி'' எனப் புலவர்பெருமக்களால் புகழ்ந்து கொண்டாடப்பட்ட இப் பெருநூலின்கண், நமது வாழ்க்கையைச் சீரும் சிறப்புமுடன் நடாத்துவதற்கு வேண்டிய முறைகள் யாவும் செறிந்த கொள்கலமாக ஓர் திருப்பாட்டு, திகழ்கின்றது. அதனைச் சிறிதீண்டு ஆராய்வோம்:

இன்பத்தை விழையாத மக்களேனும் மாக்களேனும் யாண்டும் இல்லை. கட்புலனாகாத சிற்றுயிர்களும் இன்பத்தையே விழைகின்றன. ஆறறிவு படைத்த மக்கள் இன்பத்தைப் பெரிதும் விழைகின்றார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ? எல்லாம் வல்ல இறைவனையும் 'யாவையும் கடந்த இன்பமே, என்னுடைய அன்பே,'' என மணிவாசகப்பெருமானும் வழுத்தினரல்லரோ. இவ்வின்பத்தைச் செய்யுள்வாயிலாக மெய்ப்பாட்டுடனெடுத்தோதுவர்புலவர்பெருமக்கள். அரும்பெரும் நூல்கள் யாவும், அறம் பொருள் இன்பம் வீடு என்னு மிந்நான்கினையே இனிதாக எடுத்துரைக்கும். அவற்றை, அகம் புறம் எனப் பொருள்களை இரு வகைப் படுத்துவர் தமிழர். இன்பம் அகப்பொருளில் அடங்கும்.

இன்பம், தானே யுணர்தலன்றிப் பிறர்க்கு இன்ன தன்மைத் தெனக் கூறலாகாமையின் அகம் என்று குறிக்கப்பட்டது. இவ்வின்பமும் பலவாயினும், ஒரு காலத்து ஒருபொருளால், ஐம்புலனும் நுகரும் சிறப்புடைய காமவின்பமே இங்கு இன்பமெனக் கருதப் பெறுகின்றது. அவ்வின்பந்தானும் சுவைமிகுதிதோன்ற உலகநடையோடு ஒத்தலும் ஒவ்வாமையும் உடையதாகிக் கூறப்படும். உருவும் திருவும் பருவமும் குடியும் குணனும் அன்பும் அனையவைகளால் தம்முள் ஒப்புமையுடையராய தலைவனும் தலைவியும், பிணி மூப்பாதிய வின்றி நுகரும் இன்பமே அகம் எனக் கூறப்படும் இன்பமாகும்.

ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் என, இவ்வின்பத்தை விதந்தோதுவர் நச்சினார்க்கினியர். இது, களவு கற்பு என்னும் இருபெரும் பிரிவினையுடையது.

களவொழுக்கமென்பது, ஒத்தகுலமும் ஒத்தகுணமும் ஒத்த கல்வியும், ஒத்த செல்வமும், ஒத்த அழகும், ஒத்த அன்பு முடைய தலைமகனும் தலைமகளும், தமியராய்ஓர் பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினரின்றித் தெய்வக் குறிப்பானும் பான்மை வயத்தானும் ஒருவர்மீதொருவர் மிகுங்காதல்மீதூரநின்று கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே புணரும் ஒழுக்கமாகும். பிறர்க் குரியாளாகிய தலைமகளை அவளது இருமுதுகுரவர் கொடுப்பக் கொள்ளாது, கரந்த உள்ளத்துடன் தலைமகன் அவளைத்தனிஎதிர்ப்பட்டுப் புணர்வது கடிதற்குரிய களவன்றோ எனின், அன்று. இக்களவு மற்றையகளவுகள் போலாது பெரிதும் சிறப்புடைத்து. " இங்குப் பிறவும் களவுண்மை சொல்லி அக்களவுகட்கெல்லாம் இக்களவு சிறப்புடைமை சொல்லும். சுவர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான், எனப்படுவதென்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அதுபாயிரத்துள்ளும் உரைத்தாம். மற்று உலகத்துக் களவாயினவெல்லாம் கைகுறைப்பவுங் கண் சூலவுங் கழுவேற்றவும்பட்டுப் பழியும் பாவமுமாக்கி நரகத்தொடக்கத் தீக்கதிகளினுய்க்கும். இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞான வொழுக்

கத்தோடொத்த இயல்பிற்றுகலானும், பழிபாவ மின்மையானும் எனப்படுவதென்று விசேடிக்கப் பட்டது'' என ஆலவாய் அவிர்சடைப் பெருமானரு ளிச்செய்த அகப்பொருள் நூலுக்கு உரைவகுத்த நற்றமிழ்வல்ல நக்கீரனார் நன்கெடுத்து நவில்வர்.

பொழிலகத்துப் போந்துநிற்குந் தலைமகன், மெய்ம் மையை உணரும் அறிவும், நல்லொழுக்கமென்னும் நிறையும், ஒரு பொருளை ஆராய்ந்து உணரும் ஓர்ப் பும், கொண்டபொருள் மறவாக்கடைப்பிடியும், முத லிய பெருமைக்குணங்களில் சிறந்தவனாயிருந்தும்தன் வேட்கை மிகுதியினால் இவற்றைக் கடந்துநிற்பன்.

அங்ஙனமே தலைவி, நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு முதலிய அரும்பெருங்குணங்களை அணிகலனாகக் கொண்டவளாயினும், காதல்மிகுதியினால் அவற்றைக் கடந்துநிற்பள். இங்ஙனம் நிகழ்வதற்குக் காரணமா யிருந்தது தெய்வத்திருவருட் குறிப்பேயாகும்.

ஆண்டுத் தமியளாய் நின்ற தலைமகளது, கருங்குழல் விற்புருவம் செவ்வாய் முதலிய அவயவங்களின் அழ கைக்கண்டு, 'இவள் தெய்வமகளோ, வரையரமக ளோ, நீரரமகளோ, எனத் தலைவன்ஐயமுறுவான். கால் நிலந்தோய்தலானும், கண்இமைத்தலானும் ஆடைமா சுண்ணலானும், பிறவற்றாலும், அவள் மக்களுள் ஒரு த்தியேயன்றி, வேறன்றென்று துணிவான். அவனும் அவளைக் காதல் நோக்குடன் நோக்குவான், அவளும் அவனைக் காதல்நோக்குடன் நோக்குவாள்; நோக்கிய போதே உள்ளத்தாற் புணர்ந்தவராவர்.'

இங்ஙனம் இவர் புணர்ந்ததே களவாகும். உள்ளப் புணர்ச்சியோடு அமையாது இவர் மெய்யுறுபுணர்ச்சி யும்நிகழ்த்துவர். இதனை, இயற்கைப்புணர்ச்சிஎனவும் தெய்வப்புணர்ச்சி எனவும் முன்னுறு புணர்ச்சியென வும்அகப்பொருள் நூல்கள்அழகாகஎடுத்துரைக்கும். இவையெல்லாம் ஒத்த அன்பினாலே நிகழ்வனவாம். தலைமகன், தலைமகளை நலம்பாராட்டுவான். பின்னர்ப் பிரிவு நிகழும். பிரிவு இன்னதென அறியாத் தலைமகள் நனிமிக வருந்துவாள். தலைமகன் அவளை ஆற்றவேண் டி, தன் ஊர் அணித்தென்றும், அதனாற் பலகாலு மிருவரும் காணவும் கேட்கவும் கூடுமென்றும் வன் புறை கூறித் தன் அன்பின் மிகுதிதோன்ற அவளது கருங்குழற்கற்றை மருங்கு திருத்தி அளகமும் நுத லும் தகைபெற நீவி, ஆகமும் தோளும் அணிபெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித் தளிர்ப்ப முயங்கிப் பிரி வான்.

அவன் பிரியவே, தலைமகளும் ஆயத்தாரை நாடிச் செல்வள். தலைமகனும் அவண்விட்டு நீங்கித்தலைமகளை என்று எய்தப்பெறுவோம் என வாடி நடப்பான். பாங்கன், தன்னைநினைந்து வராநின்றதலைமகனைத்தான் எதிர்ப்பட்டு அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கி, "நின்னுடைய தோள்கள் மெலிந்து நீ யிவ்வாறாதற்குக் காரணமென்னோ? உயர்மதிற் கூடலி னாய்ந்த வொண் டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ? அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ? யாது காரணம்?'' என உசா வுவான்.

தோழ, "நெருநெல் இப்பொழிலிடத்து மானின் மடநோக்குப்போலும் நோக்கையுடையவளும், பணை த்த முலையானே தேய்தலையுடைய துடிபோலு மிடை யுடையவளும் ஆய, ஓர் பெண்ணால் இவ்வாறானே ன்,'' எனக்கூறுவன். கேட்ட பாங்கன்,

"தலைவ, அமிர்தம் குணங்கெடினும், காலத்தினான் மழைதான் மாறினும், மாறுத வண்மையுடைய நினது பொன்போலப் பெறுதற்கரிய ஒழுக்கத்தை அறிவ றிந்த நீயும் அறியாது ஒழுகுகின்றது எனது தீவினைப் பயனே போலும். நின்னுடைய நீர்மையும் இவ்வாறு. ஒரு காலத்தும் கலங்காத நீயும் இத்தன்மையாயினை, நின்னைத் தெளிவிக்கும் என்னுடைய இயல்பு யாதெ ன்று சொல்வதோ? அரும்பெருந் தலைவ, நின்னை இத்தன்மையாகச் செய்த அம்மடக்கொடிக்கு உறை விடம் யாண்டுளது? தாமரைப்பூவோ, வானோ? என வியந்து வினவுவான். இவ்வுரை கேட்ட தலைவன்,

"தோழ, என் நெஞ்சை இருப்பிடமாகக் கொண்ட எம்முடைய நல்ல தெய்வம், முத்துக்களைப் பெருந் தேன் கொழித்துப் பொலிதரும் பொழிலிற்கு அழ காகும், விழியால் பிணை ஆகும். விளங்கு இயலான் மயிலாகும், மிழற்றும் மொழியால் கிளியாகும்''' என்று கூறுவன்.

கேட்ட தோழன்—"நீ சொன்ன பொழிலிடத்தே சென்று இப்பெற்றியாளைக்கண்டு இப்பொழுதே வரு வேன். அவ் வளவும் ஆற்றியிரு'' எனக் கூறிவிட்டுப் பொழிலிடத்துச் செல்வான். சென்று பிறர் தன்னைக் காணாவண்ணம் ஓர் மறைவிடத்தில் நின்று தலைவன் சொன்ன, தலைவியை நனிநோக்கி, பெரிதும் இறும்பூ துற்று, 'இவளைக் கண்டு பிரிந்து அவண்வந்து அத் துணையும் நம்மாட்டுப்பகர்ந்த நம்முடைய அண்ணலே திண்ணியான். அவனுடைய ஆற்றலே ஆற்றல்'' என வியந்துகொண்டு தலைவன்பால் அணைந்துகண்ட இடத் தைக் கூறுவான். தலைவனும், அவண் சென்று தலைவி யுடன் சேர்வன். பின்னும் பிரிவு நிகழும்.

இதன் பின்னர்ச் சிலகாலம்தலைவியின் உயிர்த்தோழி புரியும் உதவியால் அத்தலைவியைப் பகற்பொழுதில் அடைவன். ஊரார் அலர் தூற்றுவதை அறிந்து இர வுக்குறி சென்று அடைவன். இவ்வொழுக்கம், தலை மகனது அறிவு ஆற்றல் முதலியவைகளுக் கடுக்காது எனத் தோழி, தலைமகளை வரைந்துகொண்டு செல்லு மாறு அவனைத் தூண்டுவாள்.

இன்னும் இதன் வரிவையெல்லாம், திருக்கோவை யார், நம்பி அகப்பொருள், தஞ்சைவாணன் கோவை, முதலிய அரிய பெரிய நூல்களிற் காணலாம். ஈண் டுச் சுருக்கமாகவும், இவண் எடுத்துக்கொண்ட நெய் தற்கலிச் செய்யுளுக்குப் போதுமானதாகவும், கூறப் பட்டன. பல விரிந்த துறைகளமைந்தனவாய் இயற் கைநெறி வழுவாமல், பண்டைநாட் புலவர்பெரு மக்கள் நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுமாறு திருச்செய்யுளாக இக்களவினைப் பாடியருளிய அழகு உரைக்கற்பாலதன்று. அன்றியும்,

அகப்பொருள் நூல்கள் யாவும், நிலத்தை ஐந்து வகையாய்ப் பகுத்து, ஒவ்வொரு நிலத்திற்கும், உரிப் பொருள், கருப்பொருள் முதலியனகூறும். அதன் பெற்றியெல்லாம் இங்குக் கூறுவதாயின் இவ்வுரை மிகமிக விரியும். எனினும் நெய்தல்நிலத்திற் கமைந்த இவைகளைத் தெரிந்து கொள்ளாவிட்டால், இச்செய் யுளின் கருத்துத் தெரிவது அருமையாகும்.

நெய்தல் நிலமாவது, கடலும் கடல்சார்ந்த இடமு மாகும். நெய்தற்குத் தெய்வம் வருணன். தலைமகன் பெயர் துறைவன், சேர்ப்பன், மெல்லம்புலம்பன். தலைமகள் பெயர் பரத்தி, நுளைச்சி. மக்கள் பெயர் நுளையர், திமிலர், பரதவர், நுளைச்சியர், பரத்தியர்.

புள், அன்னமும், அகன்றிலும் விலங்கு, உமண் பகடு போல்வன. பிற உயிர்வகை, முதலையும் சுறவும். ஊர், பாக்கமும் பட்டினமும். நீர், மணற்கிணறும் உவர்க்கழியும். பூ, நெய்தலும் கைதையும். மரம், புன்னையும் ஞாழலும் கண்டலும். உணவு, மீன் உப்பு விலைகளிற் பெற்றன. பறை, மீன்கோட் பறையும் நாவாய்ப்பறையும். யாழ், விளரியாழ். பண் செவ்வழி. செய்தி, மீன் படுத்தலும் உப்பு விளைத்தலும் அவை விற்றலும். இரங்கலும் இரங்கல் நிமித்தமும் இதன் உரிப்பொருள்.

இங்கு எடுத்துக்கொண்ட நெய்தற்கலிச்செய்யுள் தலைவியினது நலத்தை ஆரத்துய்த்த அரும் பெரும் தலைவனைத் தோழி தெருட்டி வரைவு கடயாது, என்னும் துறையி லமைந்துள்ளது. (தொடரும்)

# பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[607-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னமும், பிரபஞ்சாதிகள் இயங்குகின்றனவாயினும், பிரபஞ்சமோ இயங்குவதுமில்லை மாறுவதுமில்லை என இவர் கூறுவதின் பொருள் என்னையோ?

அதுவுமன்றி, ஜீவராசிகளெல்லாம் தன்னலங்கருதி, சுயசுகவாழ்க்கையை முன்னிட்டு உழைத்தல் இயற்கைவிதி, அதாவது கடவுள் ஆக்ஞை எனின், பரோபகார சிந்தனை அல்லது பொதுநலத்தின் பொருட்டுக் கருமங்களை ஏற்றுப் புரிதற்கான கருத்தும் சக்தியும் எங்கிருந்து எவ்வாறு தோன்றினவோ? மூடனும் ஞானியும் இயற்கையை, அதாவது கடவுளை, ஒட்டியவரையிலும் சரிசமமெனின், ஒருவனை இகழ்ந்து மற்றவனை உயர்த்திக் கௌரவித்தலின் பொருளும் கருத்தும் என்னையோ? ஒவ்வொருவரும் சுயவழிபற்றிச் சயகுணத்தையொட்டிச் சுயலக்ஷியம் கைகூடிவர முயற்சித்து வருவதானால், வளர்ச்சி-உயர்வு-மேலேற்றம்-அறம் நாகரீகம் என்றவைகளின் பொருள் யாதோ?

உண்மையைச் சுருங்கச் சொல்வோமானால், இவர் கற்பித்துள்ள கடவுளும், உலகமும், உலகாதிகளும் எஞ்ஞான்றும் இயங்கிக்கொண்டிருப்பனவே வல்லாமல் உண்மையில், வளர்ந்து உயர்துலன்றுவனவல்ல போலும். மேலும், மூலதத்வச் சித்தாந்தங்களில் பரஸ்பர மறுப்புக்களும் (self-contradictions) குழப்பமும் உள்ளன. வியவகாரிக ஞானத்தையும் (emperical knowledge) தர்க்க முறையையும் (logical method) மாத்திரம் பின்பற்றி ஆராயப்புகின், அவ்விபரீதங்கள் தோன்றி, முற்றுண்மையை அறியவொட்டாமல் தடிப்பது இயல்புதான். ஆகையினாற்றான் அடியிற் குறிப்பிட்டவாறு ஞானவளர்ச்சியைப்பற்றி இவர் அறிவிக்கையில், பகுத்தறிவுக்கும் அநுபவத்திற்கும் அதீதமான சுயஞானம் அல்லது நுண்ணறிவு என்பதைச் சிறப்பித்திருக்கின்றார்.

கல்வி கேள்விகளால் திருத்தப்படாத குழப்பம் நிறைந்த அபிப்பிராயம், அல்லது பாவனை, என்பதின் வசப்பட்டுப் பெரும்பாலோர் உழல்கின்றனர். பின், சுய விசாரிப்பு ஆராய்ச்சிகளின் பலனை பகுத்தறிவு பெருகப்பெற்று உலகாதிகளின் வேற்றுமைகளையும், குணுதிசயங்களையும், ஏற்றந் தாழ்வுகளையும் தெளிவாக அறிகிறார்கள். பின், உலகாதிகளின் உள்ளிணக்கத்தையும், விஷயாதிகளின் மெய்த் தத்வத்தையும், பிரபஞ்சத்தின் சாராம்சத்தையும், இவைகளொவ்வொன்றுள்ளும், இவைகளுக்கும் கடவுளுக்கும், உள்ள ஒற்றுமையையும் சுயஞானத்தால் உய்த்துணர்கின்றார்கள். இவ்வாறு தெளிவும் சிறப்பும் உறுதியும் பொருந்தியிருப்பதும், இறுதியில் முற்றுண்மையை விளக்குவதும், பிரபஞ்ச மர்மத்தைக் கசடற அறிவிப்பதும் அறிவிக்கக்கூடியதும், அச் சுயஞானம் அல்லது நுட்பப்புத்தியேதான் எனவும், அறிவுறுத்தியிருக்கின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட தெற்றுக்களைத் திருத்திக் குறைகளைப் பூர்த்திசெய்து, மறைபொருள்களை விளக்கி அடியிற்கண்டவாறு ஒருவர் சுருக்கமாகச் சித்தாந்தப்படுத்தி யிருக்கின்றனர்.

"அரு உரு வெனப்படாததும், உளது இலது எனச் சொல்லற் கரியதும், சுயம்புவும், பரிபூர்ணமும் சர்வ ஞானமுஞ் சக்தியும் ஆனந்தமும் ததும்பப் பெற்றதும் ஆகிய பரம்பொருளினின்று பிரபஞ்சமும் பிரபஞ்சாதிகளும் அளப்பரிய வடிவங்களுடன் இழிந்து தோன்றிப் பரவியுள்ளன. சித்தின், சக்தியின், ஆனந்தத்தின் குணம் இயங்கிப் பரிணமிப்பதாகும். உடலமைப்பினுலும் மனப்போக்கினுலுமேதான் ஜீவராசிகளுக்குள் வித்தியாசங்கள் உண்டாகிப் பெருகுவன; சரீரமும் மனதும், ஒன்றையொன்று பாதித்து இணங்கி உயர்தற்கான பண்புடையன. ஸ்தூலத்வம் குறைந்துகழிந்து முற்றறிவு விருத்தியாகி வியாபிக்கையில், உலகைத் தன்னிலும் தன்னை உலகிலும் காண்கையில், அதாவது தன்னுள்ளும் உலகாதிகளுள்ளும் அந்தர்யாமியாயிருந்து சர்வத்தையும் பிணைத்து இயக்கித் தொழில்புரியச் செய்யும் வஸ்து ஒன்றுதான் என்பதைத் தெளிவுடனும் உறுதியுடனும் அறிகையில், பந்தங்களற்று, விபரீத மயக்கங்கள் அல்லது மித்யா ஞானம் ஒழிந்து, குறைவுநிறைவுக ளென்ற கற்பனைகள் கழிந்து, பேதாபேத பாவனையும் பயவுணர்ச்சியும் அழிந்துபோம். இந்நிலையை எப்பெயரிட்டு அழைத்தா லென்? இப்பதவி பெறுவதற்குத்தான், இந்நிலையை நாடித்தான், ஒவ்வொரு ஜீவனும் ஓடியாடி வளர்ந்து தேய்ந்து மறைந்து தோன்றி வருகின்றதுபோலும்.

"குற்றங்குறைகளும், வலிவருத்தங்களும், மடிமிடி பிணிகளும், பிரம்மஞானம் விகசிக்கையில், தாமாகவே எரிந்து பறக்கும். சற்று நிதானித்துப்பார்க்கையில், அப்பொல்லாங்குகளின் தாரதம்மியங்களைப் பற்றிய அறிவுஅநுபவங்கள் வழியாகத்தான் பிரம்மஞானம் சுரந்து பேரானந்தம் பெற்று உய்யவேண்டியதுபோல் தோன்றுகின்றது. அதாவது, கடமைகளும் உரிமைகளும், நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும், உணர்வும் அறிவும், அறிவும் ஞானமும், ஞானமும் ஆனந்தமும், பந்தமும் பேதமும் ஒன்றையொன்று எதிர்த்துத் தனித்துநின்று சதாகாலமும் போர்புரிவன அல்ல; ஆனால், அவை மேன்மேலும்நம்மை உயர்த்துவதற்கான பலதிறப் படிகள் போலும்; மூலவஸ்துவுடன் லயிப்பிக்கும் நற்சாதனங்கள் போலும்.

"பருப்பொருள்கள் ஒன்றன்பக்கல் ஒன்முக நிற்கும் நிலையைக் குறிப்பிப்பதாகும் வெளி அல்லது திக் என்பது; முன்பின்னுக வரும் நிகழ்ச்சிகளை, அல்லது மாறுதல்களை உணர்த்துவதாகும் காலம் என்பது. இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு தான் பொருள்களின் விஷயாதிகளின் இருப்பையும் இயக்கத்தையும் தன்மையையும் சிற்றறிஞராகிய நாம் அறியமுடியும். ஞாபகசக்தியும் அநுபவமும் முதிர முதிரப் பகுத்தறிவு பெருகும். இப்பகுத்தறிவு பெருகப் பெருக முற்றறிவு அல்லது பிரபஞ்ச ஞானம் தெளிந்து விரிந்து வெளியாகும். பிர்ம்மஞானம் எனப்படுவதும் இதுதான்.

"அகங்கார மமகாரங்களும் ஆசையும் வெறுத்தற்குரியன வல்ல. அகங்காரத்திஞற்றுன் ஈசன் பிரபஞ்சமாக இழிந்து விரிந்துள்ளான்; மமகாரத்திஞற்றுன் பிரபஞ்சத்தைக் கட்டியாள்கின்றுன்; பிரபஞ்சாதிகள் யாவும் உயர்ந்து ஆனந்திக்கவேண்டுமென்ற ஆசையிஞற்றுன் தொழில்புரிந்துவருகின்றுன்போலும். ஆதலால், ஈசனது அம்சமான நாமும் நம்முடைய அகங்கார மமகார ஆசைகளை ஜீவகோடிகளின் நன்மைக்காகவும்ஒற்றுமைக்காகவும் இன்பத்திற்காகவும்உபயோகித்து வரக்கூடாதோ? உண்மையில், அவைகளெல்லாம் மூலசக்தியின் பற்பல லீலைகள் போலும்.

முற்றிற்று.

# பக்தியின் பெருமை

"என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்பொன் மணியினை யெய்த வொண்ணுதே"

நல்வாழ்க்கைக்கிடமாக இனிதமைந்த இப்பூவுலகை இறைவன், மனிதர் வருந்துதற்கென்றமைத்தானென எண்ண ஒண்ணுமோ? அளவற்ற இனிய பொருள்களைத் தன் அன்பினல் படைத்துப் பரப்பியிருக்கும் ஈசனை நாமனைவரும் அறிந்துணர்ந்து வணங்கித்துதித்து அவன் பெருங் கருணையைக் கொண்டாடவேண்டாமா? கடவுள் அளித்துள்ள போகங்களை அனுபவிப்பதே அறத்துக்கு ஏற்றது. இன்பம் பபப்பன என்று அவற்றை விலக்கிவிடுவது அறிவின்மை, அன்றேல் விபரீத சிந்தையின் செயலாகும். படைத்தல் தொழிலிற்கு மூலம் அளவற்ற அன்பின் ஆற்றலே. மனிதர் சிற்றின்ப நுகர்ச்சியிலிருந்து படிப்படியாய்ப் பேரின்பத்தின் சுவையை யறிந்து தேவர்களாகி விளங்குகின்றுர்கள்.

அறிவுள்ள மனிதன் அளவுமீறிய இந்திரிய சுகங்களிலும் போகங்களிலும் கிடந்தாழ்ந்து வீண்பொழுது போக்குவதையும், காமக்குரோதங்களின் போராட்டத்தையும், சிறு விநோதங்களாலுண்டாகும் மனக்களிப்பையும், உண்மையான ஆநந்தமாகக் கருதமாட்டான். தருமத்துக்கு விரோதமான வழிகளில் விளையும் சுகங்கள் மனதைக்கெடுக்கின்றன. சரீர சுகங்களும் அற்ப விளையாடல்களும் சிந்தையைச் சிதைக்கின்றன.

இவையிரண்டும் புத்தியின் முதிர்ச்சிக்கு இடையூராய் நிற்கின்றன. உண்மையான ஆனந்தமடைய விரும்பும் மனிதன் தன்னிடம் அமைந்துள்ள உயர்ந்தகுணங்களை அபிவிருத்தி செய்வதிலும் சக்திகளை உபயோகிப்பதிலும் கவனத்தை முக்கியமாய்ச் செலுத்தவேண்டும். தன்னைப் படைத்தவனைத் துதித்தும், தன்னுடன் வாழுமுயிர்களனைத்தையும் அன்புடன் நோக்கி ஆதரித்தும், புறமேயன்றி அகத்தும் அன்பையும் அறத்தையும் வளர்ப்பதில் ஊக்கமுள்ளவனு யிருக்கவேண்டும். தன் இந்திரியங்களுக்குச் சிற்றாண் கொடுத்து உற்சாகப்படுத்தித் தன்னுடைய ஞானத்தை வளர்த்து உயர்ந்த விஷயங்களில் நாட்டம் வைக்கவேண்டும். மேலுலகத்தில், இடையறுத இன்பமயமாயிருக்கும் ஆனந்த ஆறு மடையற்று ஓடுமெனினும், இவ்வுலகில் மானிடர்மனம் பிறவியிலேயே விஷயப்பற்றிஞல் விகாரமடைந்துளது. ஆதலால் மனதைக் கெடுக்காமல் காக்கவேண்டும். எவனெருவன் தன் இச்சையினுல் தூண்டப்பட்டு மிதமீறிச் சுகங்களை அனுபவிக்கப்புகுகின்றுனே அவன் அவற்றுலுண்டாகும் துன்பங்களால் வருந்தி, தன் நோயைத் தீர்க்கக் கைப்பு மருந்துகளை அருந்தவேண்டி வரும். அவ்வாறு வருந்திஞலும், பெருங் கருணைக்கடவுள் நம் நுகர்ச்சிக்கென்றளித்த தென்னத்தகைய இப்பூவுலகில் அத்துன்பைத் துடைத்தற்குரிய பல சாதனங்களை ஓரளவு சாரவும் அவனுக்கு உரிமையுண்டு. இப்படி அவன் உடம்பு தேறத் தேற, உள்ளமும் தேறித்தேறி, உரோமம் சிலிர்த்து உடையவனுல் ஆட்கொள்ளப்படுவான்.

கெட்டோரே இங்ஙனம் கேடழிந்து உயர்வாரெனின், தம்மைப் பீடிக்கும் நோய்களையும் துன்பங்களையும் அனுபவித்து அவற்றை பொருட்படுத்துவதின்றி மனம் மாருமல் ஆறி நடுநிலையில் நிற்கும் நல்லோர் நாளடைவில் தமது துன்பங்கள் தம்மைவிட்டகலச் செய்யும் முயற்சியைக் கடவுள் ஏற்று உதவி புரிந்து அருள்செய்வாரென்பதற்கு ஐயமுண்டோ? தம்மைத்தாமுள்ளவாறு அறிந்து, தமது குற்றங் குறைகளைப் பொறுக்கவேண்டுமென்று இறைவன் தாள் வணங்கி நிற்போர் உயர்வடைவது திண்ணம். கடவுளிடத்தில் வைக்கும் பக்திவிசுவாசங்களுக்கு ஓர் எல்லை இல்லை. அகிலமெலாமாளு மிறைவனது மெச்சுதலை வேண்டி வாழும் மனிதருக்கு எவ்வித இடையூறும் தடையாய்க் காணுது. தனது முன்னேற்றத்துக்கு வேண்டும் உதவிகளை நாடுவதில் நாட்டமுடையவனுக்கு நேர்கின்ற பெருந் துன்பங்களும் இடுக்கண்களும், தனது வலிய நெஞ்சம் பழகிப்பண்படுவதற்குக் கருவிகளாய்த் தோன்றும். முக்காலமும் உணர்ந்த முதல்வனை முற்றும் பற்றித் தன் வருத்தத்தை வாய்விட்டுக் கதறுவதைத் தவிர்த்து, பொறுமையுடன் தன் மனோபாவங்களையும் நடத்தையையும், எவ்வாற்றுனும் அறியவொண்ணுத இறைவன் காட்டிய நன்னெறிக்கிணங்க நிறுத்துவதானது எவ்வித விரக்தியைக்காட்டிலும் உயர்ந்த ஆனந்தத்தை அளிக்கும் நிலையாகும்.

மனிதனுடைய சன்மார்க்கம் ஜனசமூகத்தி னிடையேதான் ஒளிபெற்று விளங்கும். பலருடன் கூடி நடத்தும் உலகவிவகாரங்களில் அடிக்கடி பற்பல இடையூறுகள் நேரும்; பலவித சிக்கனங்களும் சமாதானங்களும் செய்யவேண்டிவரும். இவ்விஷயங்களில் சரியான

வழியைத் தேடிப்பிடித்து நடப்பதால் நமக்குத்தேர்ச்சியும் பிறருக்கு நன்மையும் உள. தீமையை அகற்றுவதற்காகவேனும், அல்லது நன்மைசெய்யவேனும் அன்றி, நாம் யாரும் வருத்தமனுபவிக்கக் கடமைப்பட்டிலேம். இழிந்த வழிகளில் இறங்கச்செய்யும் செயல்களையும், நற்குணங்களை நலியும் துறைகளில் நடப்பதையும் நாம் தவிர்த்துவிடுவோமாயின்ன், நமக்கு உலகத்தில் இன்ப நுகர்ச்சிதானும் இகழ்தற்பாலதோ? மனிதருக்கு அம்மையில் அழியாத ஐச்வரியமும் அளக்கமுடியாத ஆனந்தமும் கிடைக்கக்கூடும்; இம்மையில் ஏற்படக்கூடிய இன்பம் இழிந்ததுதான் குறைந்ததுதான்; எனினும், கடவுள் தன் கைகளால் எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுக்கின்ற விஷயசுகங்கள் இவ்வுலகத்தில் நமது வாழ்க்கையின் நலத்துக்கும் நற்கதிக்கும் முரண்படாவிடின், அவை அவசியமான ஊன்றுகோல்களாய் நின்று உதவி புரியும். ஆகையாலன்றோ, திருமங்கையாழ்வார்,

> காயோடு நீடு கனியுண்டு வீசுகடுங்கால்
> நுகர்ந்து நெடுங்கால மைந்து
> தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா
> திருமார்பனைச் சிந்தையுள் வைத்து மென்பீர்.

என்கிறார்.

இவ்வுண்மையை உணர்ந்தன்றோ திருஞான சம்பந்தரும்,

> "வீடு ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
> வாடி ஞானமென் னவது"?

என்கிறார்.

உடம்பை வருத்துவதில் உபயோகமில்லை. ஐம்புலன்களை யடக்கியாள்வது அசாத்தியமான காரியம்.

> அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலா
> ரஞ்சு மடக்கு மமரு மங்கிலை
> யஞ்சு மடக்கில சேதனமா மென்றிட்
> டஞ்சு மடக்கா வறிவறிந் தேனே."

என்கிறார் திருமூல நாயனாரும். காட்டில்போய்த் தவம் புரியும் தப்பெண்ணம் தவிர்ந்து, கடவுளுக்கு மாத்திரமேயன்றி உலகத்தாரனைவருக்கும் நமக்கு முள்ள சம்பந்தத்தைச்சிந்தை செய்வோம். மதாபிமானமென்பது கோயிலிலும் குளத்திலும் மாத்திரமே குடிகொண்டதன்று. மதப்பற்று மனித சகவாசத்தை நீக்குவதால் தான் விளைவதன்று. இத் தப்பெண்ணங்கள், நம்மை உலகத்தாரனைவரோடும் பிணைத்துநிற்கின்ற அன்பு எனும் வலிய பாசத்தை அறுத்துவிடும் என்று அஞ்சுங்கள்.

நமக்கு உயிரளித்த நாதனை நாம் வணங்கும் வகைகளில் சிறந்தது எதுவென்றால், குறைகூறித் திரியாமல், நமக்குக் கடவுள் காட்டிய வழியில் மனவமைதியுடனும் உற்சாகத்துடனும் நடந்து வருவதே.

# பொதிகை நிகண்டு

[612-வது பக்கத் தொடர்ச்சி]

சேகரத்தி லேறும்பல் பகடோரி கலைமாச்
  சேவல்போத் தொருத்தல்களி றுதழ்கண்டி மோத்தை
வேகமுற்ற தகர்கடுவன் போதகஞ்சே விரலை
  விலங்கினுண் பேர்பிடிபி ணுமந்தி பெட்டை
நாகுபிணை பாட்டிபெடை பேடுகட மையும்பெ
  ணுமமாம் பறழ்பிள்ளை *குஞ்சிகன்று பார்ப்பு
வாகின்மறி குருளையுங்குட் டியின்பேராங் குருத்து
  மருப்புலவை சிருங்கங்கோ டைம்பேராங் கொம்பே.

கொம்பிலா மிருகப்பேர் குமரமே ழையுமாங்
  கூலம்வே சகந்தோகை வாலிலாங் குலமும்
வெம்புவா லதியுமாம் வாற்கீழே பிருட்டம்
  வெருகமாம் பீலிமயில் போத்தெழால் சேவ
லம்பறவை யாண்பேராம் பேடுபெடை பெட்டை
  யளகுபுள்ளின் பெண்பேராங் குஞ்சுபிள்ளை பார்ப்பு
செம்பறவைக் குஞ்சியின்பேர் தொழுதியதின் கூட்டஞ்
  சிறகடித்த லோசனித்த றுழனியொலித் தாக்கே. ()

தாக்கியன்புள் ளுவணன்கீர்த் தனன்பறவைக் கரசு
  சற்பாரி ககபதினா காசனனே வயின
னேர்க்கலுழன் வயினதே யன்கருடன் பேரா
  மெகினமோ திமமஞ்சம் விகங்கம்வக் கிராங்கந்
தேக்கன மராளமெழு பேரன்ன மதற்காஞ்
  சிம்புள்சா†ழுகம்வருடை சம்பரந்து ரோணம்
மார்க்குமட்ட பதியெண்காற் புள்ளுடன்வா ருண்ட
  மவைசரப மாமசுணப் புட்பேர்கே கயமே. (133)

கேகயஞ்சி காவளம யூரமஞ்ஞை பீலி
  கேழ்ஞமலி சிகண்டிகலா பஞ்சருணி நவிரந்
தோகைபிணி முகமொகரஞ் சிகிமயிலீ ரேழாந்
  தூவிசந்தி ராங்கமணி கூழைதொங்கல் சருண
மேகநிறப் பீலிகலா பந்தோகை சிகண்டம்
  வேசகங்கூந் தலுமயிலி னிறகாகு முருந்தென்
னுகுமதன் முள்ளின்பேர் குரலேங்க லகவ
  ‡லாலலெழா லியன்மயிலாட் டெனநேமித் தனரே.

நேமியா னையிருஞ்சி சக்கரமே கோக
  நேரானைக் குருகுகொம்பி சக்கரவா கப்பேர்
காமகாகளம்பரபுட் டம்பிகமே பிதத்தி
  களகண்டங் கோரகைகோ கிலங்குயிலின் பேராம்
ஊமன்கோட் டான்குடிஞை கௌசிகமே பெரும்பு
  ளுலூகலங் குராணிசா சரிகூகை யதின்பேர்
சோமனிலா முக்கிபோ தகைசகோ ரமதாந்
  தூக்கணங் குரீஇசிதக னெனும்பேர்சார்ந் தனவே.

சாரங்க மென்பதுசா தகப்புள்ளாங் கரடந்
  தனியரிட்டம் பிள்ளைகொடி காரிபுட்டங் காகம்
கூருங்காக் கையின்பேராம் வாயசமு மதற்காம்
  கொண்டகா கோலமண்டங் காக்கைப்பே ரர்க்கங்
காரண்ட நீர்க்காக்கை குக்கில்செம்போத் தாகுங்
  காரிபிள்ளை கிரவுஞ்ச மூன்றுமன்றி லாகும்
பாரின்புண் டரமுவணம் பணவைபூ கந்தி
  பவணைபா சஞ்சகுந்த மெருவைகழு கிதுவே. (136)

இதற்பூழுஞ் சிரவமுமே கவுதாரி யாகு
  மிகற்சேவல் வாரணங்குக் குடஞானி குருகு
பதப்படையாண் டலைகொற்றி துவசஞ்சா மப்புட்
  பகுசரணு யுதங்காலா யுதங்கோழிப் பேரா

* குழவி கன்று (பி-ம்)
† ழுவம்வருடை (பி-ம்)
‡ லாலலய ருதன்மயிலாட் (பி-ம்)

மதக்கற்கி கஞ்சரீ டங்கிகிணி வயவன்
வலியான்பேர் கஞ்சனம்பா ரத்துவா சமும்பேர்
பிதற்றுவய வன்கயவாய் வஞ்சுளன்கஞ் சனமே
பிள்ளைவயான் காரிகரிக் குருவிப்பேர் பாரே. (137)

பாரசிகை பாறுகங்கஞ் சேனமென மூன்றும்
பருந்தாம்வா னம்பாடி கம்புள்கலிங் கமதாங்
கீரமவங் திகைவன்னி தத்தைசுவா கதமே
கிள்ளையரி சுகஞ்சாரு வொன்பதுபேர் கிளிக்காஞ்
சாரிகையே பூவைநா குணவாய்ப்புள் ளாகும்
சகடம்விகங் கங்குலிங்கம் புலிங்கமுமூர்க் குருவிப்
பேரதுவா முள்ளலுள்ளான் பேராங்கூ னிருடி
பிங்கலேகின் னரமாந்தைப் பேராயுன் னுகவே. (138)

உன்னமொடு கின்னரங்கி ராமநீர்ப் பறவை
யுக்குரோ சமுமாகுங் காளபதம் புறவம்
பொன்னுறுக ளரவதம்பா ராவதங்க போதம்
புறவாந்தூ துணமுமாங் கபிலசமே குறும்பூழ்
தென்னுறுகா டையின்பேராந் திகத்திரி$தித் திரியே
சிரல்கவுதஞ் சிச்சிலிமீன் கொற்றிபொன்வாய்ப்புள்ளா
மன்னுசெவ்வற் குருவியின்பேர் சில்லேபகண் டையதாம்
வருடம்புள் ளோடுசெலாங் கமும்பொய்யாப் புள்ளே. ()

புட்கரம்வண் டானஞ்சா ரசஞ்சிகரி தாளி
போதாப்பி தாக்குருகு நாரையின்பேர் குரண்டங்
கட்குருகு பகம்வலா கமுங்கொக்கின் பேராங்
காதம்பம் பூழான்கா ணுங்கோழிப் பேராம்
வட்குசம்பங் கோழிகம்பு ளாந்துரிஞ்சில் வாவல்
வௌவாலஞ் சலிகையா லாலமுமற் றதற்காம்
வெட்கியவிந் திரகோப மீயன்மூ தாவா
மின்மினிப்பேர் கைச்சோத¶நித்திலென வறியே. (140)

அறுபதஞ்சி லீமுகஞ்சஞ் சரிகமா மதுப
மரிசூதம் புண்டரிகம் வரிகமுது ஞிமிறு
பொறியளியீ மதுகரங்கே சவம்பிருங்கஞ் சரகம்
புட்பிரசம் பிரமரஞ்சஞ் சாளிகங் கண்ணுசி
துறுமலர்க்கேள் சாரங்கங் கரும்புமந்தி கீதம்
சுரும்புகே சரங்கண்டந் தும்பிவரிக் கடைதேன்
சிறைவண்டாஞ் சிமிலிசில் லேசில்வீ டுநெடி
சிதடிசலா பம்பதங்கம்*சில்லிசைவிட்டிலுக்கே. (141)

விட்டநுளம் பஞலமச கந்துள்ளல் சலவல்
வெவ்வொலுங்கு மற்கூற லொடுநொள்ளல் கொதுகாம்
பட்டசகுந் தங்குடிஞை குருவிபக்கி விகுரம்
பதங்கம்விகங் கஞ்சகுனம் பிணிமுகம்புட் போகில்
கட்டியபத் திரிவயினம் புலிங்கமே யக்கங்
ககங்குரீஇ பறவையின்பேர் சினைகருப்பீள் வரிட்டம்
முட்டையுடன் கோசமண்ட மாந்துண்டஞ் சஞ்சு
மூக்கலகு சுவவுமாஞ் சச்செனவும் பறையே. (142)

பறைசதனங் குரல்வாசங் கூழைசிறை சேதம்
பத்திரமே தோகையிறை தூவிபிச்சங் கூர
லிறகுபக்கஞ் சதஞ்சிறகின் பேராகுஞ் சிகடை
இறும்பழலி யூர்மிருகம் பீலிகைசு†லோக
முறைவிபிலன் கண்மூக்கி யெறும்பின்பே ரொன்பா
னுலுகைகர வான்சிலம்பி சிலந்தியின்பேர் தெறுக்
முறுகுவிருச் சிகந்துட்டன் விடாளிதே ளாகு [கான்
முகடேமற் குணமூட்டை குடவனும்பன் னுவரே. (143)

பன்னகமண் டலிபோகி யகிமிருக நாகம்
பாந்தள்விட ருகம்புயங்கம் சக்கிரிம ராளங்
துன்னரவு தாசனன்கட் செவிதந்த சூகஞ்
சூரிபவ ஞசனங்கஞ் சுகியரிவி யாளங்
குன்னுரகங் காத்திரவே யன்பணி விகாதங்
கூடபதம் விடதரங்கா கோதரமா சுணமே
யன்னியங்கும் பீனசமண் டசம்பணங்கா ரீச
மங்கதங்கா லிலிசர்ப்ப மாருறும் பாம்பே. (144)

பாம்பினுட்குக் குடசற்பங் குடசற்பம் பறவைப்
பாம்பாமி ராசிலந்துண் டமுஞ்சாரைப் பாம்பாங்
கூம்புகரு வழலேயின்பேரி ராசமந்த மாகுங்
கோளகைமண் டலியாகு மூர்க்கனே நாகந்
தேம்பெரும்பாம் பேபாந்தண் மாசுணமாம் விரியன்
சிறுபாம்பாங் கண்கொத்தி மாலுதா சனனும்
தூம்புதட்டம் பைகாறு பற்கட்டா முத்தி
துத்திபொறி பணம்பைபட நாக்கவர்நா னிலத்தே.

நிலவேர்கூழ் நன்ஞகம் பூநாக மாகு [கும்
நிரைக்கறையான் ‡சிதல்செல்லா முழுவுசுவென் றூ
பலிதம்பொந் திற்கோதாக் கோகிலமே புள்ளி
பல்லிகெவு ளியின்பேரா நெளிவட்டை செழுகஞ்
சிலதுநா கரவட்டை நொள்ளையதா மாழல்
சிதலாகு மீனிநா குணிகிருமி கீட
முலேயுமெலும் பிலிபொட்டுப் புழுவின்பேர் கிளிஞ்சி
லூமையெருந் தேரல்பிண்ட மிப்பிசிப்பிக் குறுமே.

உறுப்படக்கி துளிகூர்மங் கச்சபமே கமட
மொடுங்கியா மையின்பேராங் கரவுகரா விடங்கர்
கறுத்தவன்மீன் கிஞ்சுமார முதலேயின்பே ரலவன்
கள்வனு மதிஞெண்டு கவைத்தாள்கற் கடக
நிறுத்தகுளிர் ஞெள்ளிநள்ளி யிடுக்கிநண்டின் பேரா
நீகமரி மரைதேரை தளர்நுணன்மண் டூகந்
துறுத்துசரி சபந்தவளை யாம்வட்டி யலகு
சோகிபல கறைகவடி வெள்வரியும் பணியே. (147)

பணிலம்வா ரணநாகு சுரிமுகங்கொக் கரைகூன்
பாலிவலம் புரிகோடு வளைநந்து நத்தை
தணியுமிடம் புரிநத்தங் கம்புவெள்ளை சங்கஞ்
சலஞ்சலமே சங்கின்பே ரிப்பியாயி ரஞ்சூழ்ந்
தணியுமிடம் புரியாகு மிடம்புரியா யிரஞ்சூழ்ந்
ததனைவலம் புரியென்பார் வலம்புரியா யிரஞ்சூழ்
மணிவளையே சலஞ்சலமாஞ் சலஞ்சலமா யிரஞ்சூழ்
வளைபாஞ்ச சன்னியமென மொழிவர்கலே ஞோரே.

கலேமகர மான்சுறு மீனேறுஞ் சுறவாங்
கயல்சபரஞ் சேலாங்கெண் டையின்பேர்வ ரான்மீன்
மலேயிரு விறலாகுங் கெடிற்றுமீன் கெளிறு
மலங்கின்பேர் நூறையதா மாரலா ராலாஞ்
சலசரமீப் புழல்வகுலி மயிலே$பட்ட மச்சம்
சவலேசம்பை புழன்மீன மீன்பொதுப்பேர் பத்தாஞ்
செலுமானை மீன்றிமியம் மீனேவிழுங் குவது
திமிதிமியம் மீனேயுண்ணுந் திமிங்கிலஞ்சந் ததமே.

$ திக்கிலியே (பி-ம்)
¶ நுளம்பு நித்திலறியே (பி-ம்)
* சில்லிகைவிட் (பி-ம்)
† லோப (பி-ம்)

‡ சிதலே செல்லா (பி-ம்)
$ பட்டை (பி-ம்)

மூன்றுவது விலங்கின் பெயர்த்தொகுதி முற்றும்.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—6. கரன் வதைப் படலம்.

[615-வது பக்கத் தொடர்ச்சி]

மூக்குட னுசையை முடியப் போக்கிலள்.

கொண்ட கோபத்தொரு கொடுமையால், கையிருந்த நெடிய திண்சிலை யொடிதலும், மற்றோர் வெஞ்சிலை இராமன்கை யின்மையால்அழிந்தது தம் வலி இனியென விண்ணவர் துணுக்கமுற்றேங்குமளவில்,

மன்னர் மன்னவன் செம்மல் மரபினுற்
பின்னு றத்தன் பெருங்கர நீட்டினன்.

[தயரதன் புதல்வனுகிய இராமன், சமயகேதப்படி, தன் பெரிய கரத்தினைப் பினபுறம் நீட்டினன்]

அப்பொழுது,

கண்டு நின்று கருத்துணர்ந் தானென
அண்டர் நாதன் றடக்கையி னத்துணை
பண்டு போர்மழு வாளியைப் பண்பினுற்
கொண்ட வில்லை வருணன் கொடுத்தனன்

[வருணன் அதனைப்பார்தது இராமனது உள்ளத்தை அறிந்துகொண்டு, முன்னொருகால் போர்க்குவந்த பரசுராமனைவென்றுவாங்கிக்கொண்டு அவ்வருணனிடத்தில் கொடுத்துவைத்திருந்த வில்லினை, அச்சமயத்தில், தேவர்களுக்குத் தலைவனுன இராமனது பெரிய கையில் கொடுத்தான்]

கொடுத்த வில்லைக் கொண்ட னிறத்தினு
னெடுத்து வாங்கி வலங்கொண் டிடகையிற்
பிடித்த போது நெறிபிழைத் தோர்க்கெலாந்
துடித்த வாலிடக் கண்ணொடு தோளுமே.

[வருணன் கொடுத்த அந்த வில்லை, மேகம் போன்ற நிறமுடைய இராமன் ஏந்தி வலக்கையால் வளைத்து இடக்கையிற் பிடித்தபோது, நன்னெறிதப்பிய அரக்கர் யாவர்க்கும், தீநிமித்தமாக, இடக்கண்ணும் இடத்தோளுந் துடித்தன]

இடத்தோள் துடித்த துடிப்பு அடங்காமுன்னம், இராமன் சரத்தினுல் கரனது வலத்தோள் அற்றுப் பார்மிசை வீழ்ந்தது. பின்னுமென்!

வரம ரக்கன் படைத்தலின் மாயையின்
உரமுடைத் தன்மை யாலுல கேழையும்
பரமு ருக்கிய பாவத்தி னுல்வலக்
கரமெ னக்கரன் கண்டமுற் றுனரோ

[வரங்கள் பெற்றிருப்பதாலும்மாயையினுலும் தேகபலத்தினுலும்,ஏழு உலகத்தையும் மிகவும் அழிதத பாவத்தினுல் அரக்கனுகிய இராவணன் தன் வலக்கரத்தை இழந்தது போல் கரன் கழுத்தறுபட்டு வீழ்ந்தான்]

குலசேகரப்பெருமானனைய மெய்யன்புடையபுனித மேன்மையோர் குறைதீரக் கடிகைமூன்றில் அக்கொடும்போர் இவ்வண்ணம் இனிது முடிதலும்,

முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற
இனிய சிந்தை யிராமனு மேகினன்
அனிக வெஞ்சமத் தாருயிர் போகத்தான்
தனியி ருந்த வுடலன்ன தையல்பால்

[முனிவர்கள் வந்து வரிசை வரிசையாகச் சூழ்ந்துகொள்ள இனியசிந்தையனுய் இராமனும், அரக்கர் சேனையோடு செய்த போரின்கண் தன் அரியஉயிர் சென்றிருக்கத் தான் தனியேயிருந்த உடல்போன்ற சீதையினிடம் சென்றுன்]

விண்ணி னீங்கிய வெய்யவர் மேனியிற்
புண்ணி னீரும் பொடிகளும் போயுக
அண்ணல் வீரனைத் தம்பியு மன்னமுங்
கண்ணி னீரினிற் பாதங் கழுவினர்.

[மடிந்து விண்ணுலகம் சேர்ந்த கொடிய அரக்கர்களது உடலிலிருந்து சொரிந்த இரத்தமும் போர்க்களத்தில் படிந்த புழுதியும் நீங்கும்படி பெருமைவாய்ந்த வீரனுன இராமனை, இலக்குவனும் அன்னம்போன்ற சீதையும் தங்கள் கண்ணீரினுல் பாதங்களைக் கழுவினர்]

இராமனும் இனிதிருந்தனன். இனிதிருக்கமாட்டாதாள் ஒருத்தி சூர்ப்பணகை உளள். இராமனுக்கொரு கூற்றவனைக் கொணர்கின்றேன் என்று அழைத்து வந்த கரனையே கூற்றுவன்கையில் காட்டித்தந்த விதமாய்முடிந்தவிப் பரிபவங்கண்டுவருந்தினளாய் அவன் உடலத்தைத் தழுவிக்கொண்டு பொங்குவெம் குருதியிற் புரண்டனள். புல்லொழுக்க வல்லரக்கியாயினும், கரன்கிடந்த களங்காணச் சகியாளாய், ஏசறவெய்தி,

ஆக்கி னேன்மனத் தாசையவ் வாசையென்
மூக்கி னேடு முடிய முடித்திலேன்
வாக்கி னுலுங்கள் வாழ்வையு நாளையும்
போக்கி னேன்கொடி யேனென்று போயினுள்

[என் மனத்திலே ஓர் ஆசையை உண்டாக்கிக் கொண்டேன். அவ்வாசை என் மூக்கினேடு முடிந்தபின்னும் சும்மாவிராமல், என் வாயினுலே உங்கள் வாழ்வையும் ஆயுளை'யும் ஒழித்தேன், கொடியேன் நான்—என்று சொல்லிக் கொண்டு போயினுள்]

தலைகள்தோறும் முடியுடை அரக்கன்தன் வெற்றியம் பதாகை அற்று வீழ்ந்ததென முன்னர்த் தாடகை வீழ்ந்தாள். அம் மணியுடை மகுடத் தலை துமித்தற்கு நாட்கொண்ட தொத்துச் சூர்ப்பணகையின் மூக்கு அவள் முகத்தொடு பிணங்கிப் போயிற்று. அவ்விராவணன் தன் வலக்கை இழந்தானெனக் கரன் இங்குச் சிரமிழந்து வீழ்ந்தான். தான் ஆக்கிய ஆசை மூக்கினேடு முடியாமை கண்டு கலுழ்ந்தாளேனும், அம் மூக்கினுல் வைத்தநாள் கரனுடன் முடியாமல்,

அலங்கல் வேற்கை யரக்கரை யாசறக்
குலங்கள் வேரறப் பான்குறித் தாளுயிர்
கலங்கு சூறைவன் போர்நெடுங் காலென
இலங்கை மாநகர் நொய்திற்சென் றெய்தினுள்

[வெற்றிமாலை சூட்டிய வேலை ஏந்திய அரக்கர்களை எல்லாம் குலங்களோடு தொலையுமாறு வேரறுக்கக் குறித்தவளாகிய சூர்ப்பணகை, உயிர்களைக் கலக்குகின்ற வலிய மோதுகின்ற சுழற்காற்றைப்போல, விரைவிற் சென்று இலங்கைமா நகரைச் சேர்ந்தாள்]

இலக்குவற்கு முன்வந்தோன் கரனைப் பொருதழித்த விதத்தினை, வான்மீகிமுனிவருக்குப் பின்வந்தநம் கம்பர் உரைத்தவாறு இவ்வாறு. இக்கருமத்தில், வீர இராகவன்வலக்கரம் வாங்கிய வில் இற்றவீழ்ந்தவோர் நிகழ்ச்சி அவனது ஆண்மைக்குச் சிறிது பழுது விளைத்ததோ என்று உட்குவோர்க்கு ஒருவண்ணம் அமைதியளிக்கக் கம்பர் முயன்ற பெற்றியினை நினைக்குங்கால், “செவ்விய மனத்தோன் ஆதலின் இராமன் மாயப்

போர்க்காற்றுமல் முனிந்தனன், வரவொண்ணு அம்முனிவுமனத்தின்கண் வந்ததாதலின் இறலாகா அவனது கையிருந்த முனியும் இற்றது, இதுவே கடக்கலாகாக் கவிதா நீதி கண்டீர்; எனினும், அவ் வெகுளியிற் பழி பெரிது அவன் குணத்திற்கு இல்லாமை போன்றே இவ் வில்லின் அழிவினுலும் பெரும் இழிவு அவனது வீரத்திற்கும் உற்றதில்லை'', என்னுங் கருத்தினுல் இங்நிகழ்ச்சியை இழைக்கின்றுர் என்பது தெரியவருகின்றது. இதனை மனத்தில்வைத்து இனி, கம்பருக்குமுன் வந்த அவ் வடநூல்முனிவர் இதனையே வகுத்துரைத்திருந்த விதத்தையு மிங்குச் சிறிதாராய்தல்வேண்டும். கூறுவார் முனிவர்:—

"திரிசிரனுடன் தூஷணனும் யுத்தத்தில் மாண்டதைக் கண்ட கரன் இராமருடைய பராக்கிரமத்தைப் பார்த்துப் பயந்தான். மகா பலம்பொருந்திய கரன் யாரும் நெருங்க முடியாத தனது பெரிய அரக்கர் படையும் திரிசிர தூஷணர்களும் இராமர் ஒருவரால் மாண்டதைக்கண்டு துன்புற்று, நமுசி இந்திரனை எதிர்த்துச்சென்றதுபோல, இராமரை எதிர்த்துச் சென்றுன். கரன் தனது பலமான வில்லை நாணேற்றி இரத்தத்தில் தோய்ந்து கோபங்கொண்ட விஷசர்ப்பங்கள் போல் விளங்கும் பாணங்களை இராமர்மேல் விடுத்தான். அவன் தேரிலேறி, அடிக்கடி நாணையிழுத்துத் தெறித்துக்கொண்டு, ஆயுதப் பயிற்சி மிகுதியின் செருக்கால் ஆயுதங்களை வெளியில் காட்டிக்கொண்டு, பொர்க்களத்தில்சுற்றித்திரிந்தான். அதுஅன்றியும், மகாரதனுன கரன் எண்டிசைகளையும் தனது பாணங்களால் மூடினுன். அதை இராமர் பார்த்துத் தமது பாரவில்லைக் கையிலெடுத்து, மேகம் மழையைப் பொழிவதுபோல, நெருப்புப் பொறிகள் கக்குகின்ற சகிக்கமுடியாத பாணங்களைப் பொழிந்து, ஆகாசத்தைக் கொஞ்சமேனும் இடைவெளி இல்லாமல் மறைத்துவிட்டார். இவ்விதமாக இராமரும் கரனும் விடுத்த கூரிய பாணங்களால் ஆகாயம் முழுதும் எல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டது. இருவரும் ஒருவரோ டொருவர் சினந்து யுத்தம் பண்ணும்பொழுது பாணங்களின் சமூகத்தில் மறைந்து சூரியன் பிரகாசிக்கவில்லை.

கரன், கொஞ்சம் வளைந்த கூரிய முனையுள்ள நாளீகம் நாராசம் என்ற பாணங்களால், மகாகஜத்தைத் தாற்றுக்கோலால் குத்துவதுபோல, இராமரைத் தாக்கினுன். அன்றியும் அவ்வரக்கன் கையில் வில்லுடன் இரதத்தில் உட்கார்ந்திருந்தது, கையில் பாசத்தைப் பிடித்துவந்த யமன் போல்,எல்லாப் பிராணிகளுக்கும் தோன்றலாயிற்று. தனது படை முழுவதையுங் கொன்ற இராமர் வெகு பராக்கிரம சாலி என்றுலும், அவர் அப்பொழுது கொஞ்சம் களைத்திருந்ததாகக் கரன் எண்ணினுன். சிங்கம்போலச் செருக்கடைந்து நடந்த கரனை இராமர் பார்த்து ஒரு சிங்கமானது அற்ப மிருகத்தை எவ்வாறு எண்ணுமோ அவ்வாறு கருதினுர். அவ்வண்ணம் நிற்கும் இராமரோடு, அந்துப்பூச்சி நெருப்பில் விழுவதுபோல, கரன் தனது சூரியனுக்கொப்பான பெரிய இரதத்துடன் போர்புரிய வந்துசேர்ந்தான். உடனே அவன் தனது கைவன்மையைக் காட்டும் விதமாக மகாத்துமாவாகிய இராமர் பிடித்திருந்த வில்லை அதில் பூட்டிய அம்புடன் இரண்டாக வெட்டினுன். மறுபடி அவன் இடிக்கொப்பான ஏழு பாணங்களை எடுத்து வெகு கோபத்துடன் இராமருடைய மர்மஸ்தானங்களை நோக்கி விடுத்தான். சூரியனுக் கொப்பான பிரகாசமுடைய இராமருடைய கவசம் அப்பாணங்களால் வெட்டுண்டு கீழே விழுந்தது. அதன்மேல் கரன் ஆயிரம் பாணங்களை ஒப்பற்ற பராக்கிரமமுள்ள இராமர்மேல் விடுத்து அட்டகாசம் பண்ணினுன். அப்பாணங்களால் தேகம் முழுதும் அடியுண்டு வெகு கோபங்கொண்டு போர்க்களத்தில் நின்ற இராமர் புகையற்ற அக்கினிபோல விளங்கினுர். பிறகு, சத்துருக்களை அடக்கும் இராமர் தமது பகைவனுகிய கரனை உடனே முடித்துவிடக் கருதி வெகு கம்பீரமாக ஒலிக்கும் மற்றொரு வில்லை எடுத்து நாணேற்றினுர். அது விஷ்ணுவின் வில்; அகஸ்தியரால் இராமருக்குக் கொடுக்கப்பட்டது. புகழ்பெற்ற அந்த வில்லை இராமர் கையிலெடுத்துக் கொண்டு கரனை எதிர்த்தார். கொஞ்சம் வளைந்த முனைகளும் பொன் இறகுகளுமுள்ள பாணங்களை இராமர் வெகு கோபத்துடன் விடுத்துக் கரனுடைய கொடியைப் போர்க்களத்தில் அறுத்துத் தள்ளினுர். அந்த அழகான தங்கக்கொடி வெட்டுண்டு கீழே விழுந்தது, தேவர்களுடைய உத்தரவின்படி சூரியன் பூமியில்விழுந்தது போன்றிருந்தது. போரின் நுண்மையை யறிந்த கரன் அதைக்கண்டு கோபம் கொண்டு, மதயானையைத் தாற்றுக்கோலால் குத்துவது போல, இராமர் மார்பில் நான்கு பாணங்களை அழுத்தினுன். கரன் வில்லிலிருந்து விடுக்கப்பட்ட பாணங்கள் தைத்துத் தேகமெங்கும் இரத்தமோட நின்ற இராமர் பெருங் கோபங்கொண்டார். உடனே வில்வித்தையில் முதல்வரான இராமர் தமது பாரவில்லைக் கையிலேந்தி நாணெறிந்து இலக்காக ஆறுபாணங்களை எய்தார். அவைகளில் ஒன்று கரன் தலையிலும், இரண்டு அவன் கைகளிலும், மற்றைய அர்த்த சந்திரன் போன்ற மூன்று பாணங்கள் அவன் மார்பிலும் தைத்தன. பிறகும் அதிக பராக்கிரமமுடையவரான இராமர் பெருங் கோபங்கொண்டு கரன்மேல் சூரியனுக்கொப்பான பதின்மூன்று பாணங்களை விடுத்து, ஒன்றுல் அவனது இரதத்தின் நுகத்தடியையும், நான்கு பாணங்களால் நான்கு குதிரைகளையும், ஆறுவது பாணத்தால் சாரதியின் தலையையும், மூன்று பாணங்களால் இரதத்தின் பாரையும், இரண்டு பாணங்களால் அதன் அச்சையும்,வச்சிராயுதத்துக் கொப்பான பன்னிரண்டாவது பாணத்தால் அவனுடைய வில்லையும் வெட்டி, பதின்மூன்றும் பாணத்தால் அவன் உடலையும் விளையாட்டாகத் துளைத்தார். அப்பொழுது கரன் வில் முறிந்து, இரதமழிந்து, குதிரைகளும் சாரதியும் மாண்டு, கையில் கதையை எடுத்துக்கொண்டு தரையில் குதித்தான்.

மகாரதராகிய இராமர் இவ்வாறு செய்த ஆச்சரியமான காரியத்தைத் தேவர்களும் மகரிஷிகளும் கண்டு களித்துக் கைகூப்பித் தங்கள் தங்கள் விமானங்களி லிருந்தபடியே அவரைத் துதித்தார்கள்.

இரதமற்றுக் கதாபாணியாகத் தம்முன் வந்துநின்ற கரனைப்பார்த்து அதிக தேஜசுடன் விளங்கும் இராமர் வெகு மிருதுவாக அவன் கொடிய செயல்களை யெடுத்துக்காட்டினுர்:—"இரதகஜதுரக பதாதிகள் நிரம்பிய பெருஞ்சேனையின் உதவியால், நீ உலகத்திலுள்ளார் யாவரும் அருவருக்கத்தக்க கொடிய செயலைச் செய்துவந்தாய். ஒருவன் இம்


மூவுலகங்களுக்கும் ஈசனாக இருப்பினும், கொடியவனாகவும் பாவமான காரியங்களைச் செய்கிறவனாகவும் இருந்தால் அவன் க்ஷேமமாக வாழமாட்டான். உலகத்துக் கொவ்வாத கொடிய செயல்கள் செய்யும் பாவியை, கொடிய பாம்பை வதைப்பதுபோல், எல்லாரும் வதைப்பார்கள். எவனொருவன் உலோபத்தன்மையால் பாபங்களைப் பண்ணிக்கொண்டு அதிக இலாபத்தின் இச்சையால் தான் செய்வது பாபமென்றறியாமல் இருக்கிறானோ அவன் ஐஸ்வரியத்திலிருந்து விலக்கப்பட்டவனாய், ஆலங்கட்டியைப் புசித்து அறணை மாண்டுவிடுவது போல, சீக்கிரம் மாள்வான். தருமத்தை நடத்திக்கொண்டு தண்டகாரணியத்தில் வசித்துவரும் தபசிகளைக் கொன்றதனால் உனக்கு என்ன இலாபம்? உலகத்தார் வெறுக்கும் கொடிய செய்கைகளைச் செய்யும் பாவிகள் ஒருபொழுதும் க்ஷேமமாக இருக்கமாட்டார்கள்; வேரற்ற விருக்ஷம்போல் அழிந்துவிடுவார்கள். விருக்ஷங்கள் பருவத்தில் புஷ்பிப்பதுபோல, பாவத்தொழிலைச் செய்பவன் ஒவ்வொருவனும் அத்தொழிலின் பலனைத் தக்கநேரத்தில் தப்பாமல் அடைவான். விஷங்கலந்த அன்னத்தைப் புசித்ததின் பலனை உடனே காண்பதுபோல, மனிதரும் தங்களுடைய செயலின் பயனை உடனே காண்பார்கள். உலகத்துக்குத் தீமையைச்செய்யும் கொடிய பாவிகளுடைய பிராணனை வாங்க * அரசனால் நான் கட்டளையிடப்பட்டிருக்கிறேன். இப்பொழுது என்னால் விடுக்கப்படும் தங்கமிழைக்கப்பட்ட பாணங்கள் உனது உடலை ஊடுருவி, பாம்புகள் புற்றில் நுழைவதுபோல, பூமியைப் போழ்ந்து புக்கொளிக்கும். தண்டகாரணியத்தில் நீ புசித்த ரிஷிகள் போயிருக்கு மிடத்திற்கு, யுத்தத்தில் கொல்லப்பட்டு நீயும் நினது சேனையுடன் போகலாம். முன்னரே உன்னால் கொல்லப்பட்ட ரிஷிகள் இன்று விமானங்களிலிருந்துகொண்டு நீ எனது பாணங்களால் அடிபட்டு மாண்டு நரகத்தில் வீழ்வதைப் பார்க்கப்போகிறார்கள். உனது இஷ்டப்பிரகாரம் நீ பொருதுபார். இழிகுலத்தோனே, உன்னால் கூடுமானதையெல்லாம் நீ செய். இன்று உனது தலையை, பனங்காயை அறுத்துத் தள்ளுவதுபோல, அறுத்துத் தள்ளுகிறேன்.'' இவ்வாறு இராமர் சொன்ன சொற்களைக் கேட்டுக் கோபமடைந்து கண்கள் சிவந்து கோபத்தால் ஒன்றுந் தெரியாதவனாகிக் கரன் சொல்லலுற்றான்:—''தசரதபுத்திரா, போரில் ஆற்றலில்லாத அரக்கர்களைக்கொன்றுவிட்டு, ஏன் வீணாக உன்னைப் புகழ்ந்துகொள்ளுகின்றாய்? பலமும் பராக்கிரமமும் உள்ள சூரர்கள் ஊக்கமிகுதியால் செருக்கடைந்து ஒருபொழுதும் தங்களைத் தாங்களே புகழ்ந்துகொள்ள மாட்டார்கள். நல்லுள்ள மில்லாத் அற்பமான க்ஷத்திரியர்கள்தான் இப்படி, தங்களைத் தாங்களே, நீ உன்னைப் புகழ்ந்துகொள்ளுவதுபோல், புகழ்ந்து கொள்ளுவார்கள். போர்க்களத்தில் எந்த வீரன் தன் குலத்தை எடுத்துக் கூறுவான்? மாண்டுபோகும் காலம் நெருங்கியபோது எவன்தான் தன்னைப்பற்றிப் புகழ்பாடுவான்? தருப்பைப் புல் தீயில் காய்ச்சப்பட்ட தங்கநிறமான பித்தளை கறுப்பது போல் உனது தற்புகழ்ச்சியால் நீ உனது அற்பத்தனத்தை வெளியாக்கிவிட்டாய். இவ்விடத்தில் நான் கதையைப்பிடித்துக்கொண்டு, அசைக்கக்கூடாதபெருப் பருவதம் தாதுராகத்தால் விளக்கமுற்று நிற்பதுபோல், நிற்பது உனது கண்ணிற்குப் புலப்படவில்லை. நான் கையில் கதையைப் பிடித்துக்கொண்டு உனது பிராணனை மட்டுமன்று, இம்மூவுலகத்திலும் உள்ளாருடைய பிராணன்களையும் கையில் பாசம் பிடித்த யமன்போல், தனியே வாங்கிவிடவல்லேன். நான் உனக்குச் சொல்லவேண்டிய சங்கதிகள் நிரம்ப இருக்கின்றன. அவற்றைச்சொல்ல இப்பொழுது எனக்குச் சாவகாசமில்லை. சூரியன் அஸ்தமனமாகுங்காலம் நெருங்குகின்றது. அதன் பிறகு யுத்தத்துக்கு இடையூறுவந்துவிடும். நீ பதினாலாயிரம் ராக்ஷசரைக்கொன்றதனால் அவர்கள் பந்துக்கள் விடும் துக்கக்கண்ணீரை இன்று நான் உன்னை வதைத்துத் துடைத்துவிடுகிறேன்.'' இவ்வண்ணஞ் சொல்லிக் கரன் வெகுகோபத்துடன் அழகான கேயூரமணிந்த தனது கைகளால் எரிகின்ற இடிபோன்ற கதையைக் தூக்கி இராமர் மேல் எறிந்தான். அவ்வாறு கரனுடைய கையிலிருந்து விடப்பட்ட கதை ஆகாசத்தில் ஜ்வலித்துக்கொண்டு, அநேக விருக்ஷங்களையும் புதர்களையும் நீறாக்கிக்கொண்டு, இராமரைக் கிட்டிற்று. அவ்விதமாகத் தம்மை நோக்கி அக்கினி போல் விளங்கிக் காலனுடைய பாசத்துக்கொப்பாக வந்துகொண்டிருந்த கதையை இராமர் தமது பாணங்களால் ஆகாயத்திலேயே துகளாக்கி மாற்றினார். அப்போது அது, மந்திரத்தினால் விழுத்தப்பட்ட சர்ப்பம்போல, உடைந்து பூமியில் விழுந்தது.

* தசரதர் அல்லது பரதர்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

ச்யாவனப்ராச
ஜீவஸுதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்



தைலங்கள்:

அமிர்தாமலக
பிருங்காமலக
ஸுகுமார
ஹிமஸாகர

“பாலஸுதா” குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி
### நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

### கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

### திருக்குறள்

மூலமும் சொற்றுறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணா 0-6-0

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**

# ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciatve forword.

**PRICE Rs. 5-8-0.**

## *KALANILAYAM*

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

## ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

### செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையினும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

கொலை முயற்சி:—கல்கத்தா "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை ஆசிரியர், ஸர் ஆல்பர்ட் வாட்ஸன் என்பவர், 5௳ தம்காரியாலயத்திற்கெதிரில் மோட்டார் வண்டியிலிறங்கும்போது அவரை ஒரு வங்காள வாலிபர், ரிவால்வரால் சுட்டார். எனினும் குறி தவறியதால் குண்டு அவர்மீது பாயவில்லை. சுட்டவரை, ஒரு போலீஸ் சேவகனும் காவற்காரனும் பிடித்துவிட, அவர் மறைத்து வைத்திருந்த விஷத்தை எடுத்துக் குடித்துப் பதினைந்து நிமிடத்திற்குள் மாண்டனர்.

6௳ ஹாமில்டனில் வெல்லண்டு கால்வாயைக் கவர்னர் ஜனரல் திறக்கும் சமயத்தில், பிரிட்டிஷ் மந்திரி மிஸ்டர் ஜெ. ச். தாமஸைக் கொல்லச் சிலர் முயற்சிகள் செய்திருந்தனர் என்பது தெரிந்து போலீசார், டான் மலோன் என்ற ஐரிஷ் யுவரைக் கைதுசெய்திருக்கிறார்.

***

பர்மா'சன் ஆபீஸி'ல் ஒரு சம்பவம்:—பர்மியர்கள் இறந்தவரை, அவர் இறந்த 3-வது அல்லது 5-வது தினத்தன்றுதான் புதைப்பது வழக்கம். சவம் புதைக்கப்படும் வரையில் இறந்தவரது ஆத்மா அவர் அடிக்கடி பயின்றுவந்த இடங்களில் உலவுமென்றும் அது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த வேலையிலிருந்து விடுபடும் வரை அதைச் செய்துகொண்டிருக்குமென்றும் பர்மியருள் ஒருநம்பிக்கை இருந்துவருகிறது. இந்நம்பிக்கைஉண்மைதானெனத் தமதுபிரத்தியக்ஷஅனுபவத்தில் கண்டுகொண்டதாக இரங்கூன் பர்மிய தினசரிப்பத்திரிகையின் ஆசிரியர் கூறுகின்றார். இது சம்பந்தமாக அவருக்கு ஏற்பட்ட அநுபவமாவது:—சில வாரங்களாகத் தேக அசௌக்கியமடைந்து அவதிப்பட்டுக் கொண்டிருந்த, 'ஸன்' பத்திரிகாலய அச்சுப்பிழை திருத்தும் பர்மிய உத்தியோகஸ்தர் (புரூப்ரீடர்) ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் இறந்துபோனார். ஆனால் அவர் தமது முடிவு சீக்கிரம் நேருமென அறியாமல் சனிக்கிழமை இரவில் தமது குடும்பத்தாரிடம் தாம் சில வேலைகளைப் பூர்த்தி செய்யாமல் பாக்கி வைத்திருப்பதால் திங்கட்கிழமை ஆபீசுக்குக் கட்டாயம் போகவேண்டுமென்று சொன்னாராம். இரவில் அவர் மறுபடியும் இந்த விருப்பத்தைத் தெரிவித்தாராம். மறுநாள் அதிகாலையில் அவர் இறந்துபோய்விட்டார். ஞாயிற்றுக் கிழமை மாலையில் 'சன்' பத்திரிகையின் ஆசிரியர் தனியாகவேலை செய்துகொண்டிருந்தார். ஆபீஸுக்குள் யாரோ நடப்பதுபோலும் இறந்தவர் வேலை செய்துவந்த மேஜைமீது காகிதங்களை மேஜைமேல் போடுவது போலவும் சப்தம் கேட்டது. எல்லா அறைகளையும் பத்திராதிபர் தேடிப்பார்த்தார். அவர் தேடி பார்க்கும்பொழுது சப்தம் நின்றுவிட்டதால் அவரால் யார் சப்தம் செய்கின்றார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் பத்திராதிபர் தமது அறைக்குத் திரும்பிவந்ததும் மீண்டும் யாரோ நடமாடுவது போலவும் மேஜைமீது காகிதங்களைப் போடுவதுபோலவும் சப்தம் கேட்டது. அவர் ஆபீஸில் இருக்கும்வரை இம்மாதிரி விசித்திரமான சப்தம் கேட்டது. மறுநாள் இரவில் பத்திரிகாலயத்தில் வேலைசெய்துவந்த உதவி ஆசிரியர்கள் எல்லோரும் இதேமாதிரி யாரோ நடமாடும் விசித்திர சப்தமும் காகிதங்களை மேஜைமீது போடும் சப்தமும் உண்டாவதைக் கேட்டனர். அவர்களுக்கும் இம்மாதிரியான சப்தம் கேட்பதற்குக் காரணம் தெரியவில்லை. நிர்வாக ஆசிரியரது அறையிலிருந்த மணியடிக்கும் சப்தத்தைக் கேட்டு சேவகன் அதற்குள் போனபொழுது அது இருட்டாக இருப்பதைக் கண்டான். ஆனால் அங்குமிங்குமாக நடமாடும் சப்தம் நீடித்துக் கேட்டது. நிர்வாக ஆசிரியர் பிழைதிருத்துகிறவர் இறந்துபோனது தெரியவந்தவுடன் அவர், இறந்துபோனவர் வழக்கமாக உட்கார்ந்துவந்த காலி நாற்காலியைப் பார்த்து, "உன் வேலையிலிருந்து உன்னை விடுவித்தாகி விட்டதால் நீ போய்விடு" என்று கூறினர்.

அதன்பிறகு யாரோ வெளியே நடந்து செல்லுவது போல் விசித்திர சப்தம் கேட்டது. இந்தக் காலடி சப்தம் கேட்பது கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து முடிவில் நின்றுவிட்டது. மறுநாள் பர்மியப் புதைக்காட்டில் பிழைதிருத்தும் உத்தியோகஸ்தரது சவம் அடக்கம் செய்யப்பட்ட பொழுது அதற்கு அவரது சகாக்கள் சென்றிருந்தனர். அங்கும் "உன்னை உன் வேலையிலிருந்து விடுவித்தாகி விட்டதென்று" நிர்வாக ஆசிரியர் எழுத்துமூலமாக அனுப்பியிருந்த உத்தரவு படிக்கப்பட்டது.

இதுமுதல் இம்மாதிரி யாரோ நடமாடுவது போலவும் காகிதங்களை மேஜைமீது போடுவதுபோலவுமுள்ள சப்தம் 'ஸன்' ஆபீஸில் கேட்கப்படவேயில்லை.

"சுதேசமித்திரன்"

***

திருவாளர், இராவ் சாஹிப் C. M. இராமசந்திரம் செட்டியார்வர்கள், இம்மாதம் 7௳ துறையூர் திருச்சி ஜில்லாத் தமிழ் மாணவர் மகாநாட்டினைத் திறந்துவைத்தபோது நிகழ்த்திய கட்டுரை அச்சிட்ட புத்தகம் வரப்பெற்றோம். தற்காலத்தில், ஜப்பானியர் சீனர் துருக்கியர் முதலிய பற்பல நாட்டினர்கள் வளமைகள் அடைந்துவருகின்றார்களென்றும் அதற்கு அந்நாட்டுஇளைஞர்களே ஊன்றுகோல்களாயிருக்கின்றார்களென்றும், நம் தமிழ்மக்களும் உறக்கத்தினின்று விழித்துக்கொள்ளத் தலைப்பட்டிருப்பது தமிழர் முன்னேற்றத்திற்கு நற்குறியென்றும் தமிழர்பண்டையநிலையின் பெருமையை மீண்டும் எய்துதற்கு முயலவேண்டுமென்றும் தமிழ்மொழியின் சிறப்பை யறிந்து புதிய படிப்பு முறைகளைக் கையாண்டு ஆராய்ச்சிவளர்வதால் புத்துயிரும் நல்வளமும் பெறுவதற்குப் பல்கலைக்கழகத்தாரும் மடாலயங்களுமேயன்றி ஸ்தலஸ்தாபன சங்கத்தார்களும் வாணிபச் சங்கத்தாரும் உதவி புரிய வேண்டுமென்றும், மற்றைய மொழிகளிலுள்ள நூல்களை மொழிபெயர்ப்பதால் தமிழின் குறைகளை அறிந்து நீக்கவேண்டுமென்றும், பல கலைகளை ஆராய்வதுடன் உடற்பயிற்சியும் எய்தவேண்டுமென்றும், 'கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழல்' என்னுமவ் வுயிரின் மேம்பட்டைப் பற்றிய குறிக்கோள் அல்லாமலும், மாணவர் உடல்பெருக்கும் வகையான வாணிபம் முதலிய படிப்புக்களை அதிகம் அடைய வேண்டுமென்றும், சிக்கனமாக வாழ்ந்து பொதுமக்கட்சேவை செய்யவேண்டுமென்றுங் கூறிமுடித்தார்.

---

அறிக்கை:—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.


KALANILAYAM
Reg. No. M. 2324.


# — சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

**96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.**

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுககுத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும, பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

**மைல்ஸ்டீல்** தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

— தேகபலம் —

## :: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை உபயோகியுங்கள.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இனும்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

## :: பாகவத வினா விடை ::

சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அசசிடப்பட்ட 550 பக்கங்களும் 20 சித்திரப்படஙகளும் கொணடது. விரிவான அட்டவணையும், கிருஷ்ணலீலை, லீலா சுகர் கதை போன்ற பலமுக்கியமான விடயங்களின் மெய்க் கருததை விளக்கும் அநுபந்தஙகள் அடங்கியது. ரூ. 2.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES    LIBERAL CONDITIONS
NEW TABLES    NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

## FIRE & ACCIDENT RISKS
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)